பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 8 திங்கட்கிழமை (24-09-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:302

## முல்லைத்தீவுக் கடலில் நேற்று கடற்படை - புலிகள் மோதல்!

### சந்தேகத்துக்கிடமான கப்பல் மீது விசாரணை

கொழும்பு,செப்.24

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் முல்லைத்தீவுக்கு வடகிழக்கே 36 கடல் மைல் தொலைவில் நேற்று முற்பகல் 10 மணியளவில் விடுதலைப் புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையே மோதல் இடம்பெற்றிருக்கிறது.

நேற்று நண்பகல்வரை நீடித்த இந்த மோதலில் விடுதலைப் புலிகளின் நான்கு படகுகளைக் கடற்படையினர் மூழ்கடித்ததாகவும் -

புலிகளின் ஆறுபடகுகள் சேதமாக்கப்பட்டதாகவும் -

30இற்கும் மேற்பட்ட கடற்புலி உறுப்பினர்கள் பலியாகி இருப்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டிருப்பதாகவும் -

விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்திருக்கிறது.

இந்த மோதலின்போது கடற்படையினரின் உதவிக்கு விமானப் படையினரும் அழைக்கப்பட்டனர்.

கடற்படையின் ரோந்து அணி ஒன்று விடுதலைப் புலிகளின் படகு அணி ஒன்றை அவதானித்து அதன் மீது தாக்குதல் நடத்தியதை அடுத்தே

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நம்பிக்கையில்லாப் பிரேரணை புதனன்று சமர்ப்பிக்கப்படலாம்

கொழும்பு,செப்.24

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐக்கிய தேசியக்கட்சி பெரும்பாலும் நாளைமறுதினம் புதன்கிழமை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கலாம் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நான்கு சுதந்திர ஆணைக்குழுக்கள் அமைப்பது தொடர்பான 17 ஆவது திருத்தப் பிரேரணை இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அதன்மீதான வாக்கெடுப்பு இன்று முடிவடைந்த பின்னர் -

நாளை மறுதினம் நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

அரசமைப்பில் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைப்பதற்கு இரு தினங்களுக்கு முன்னர் - அதாவது அடுத்த மாதம் 8 ஆம் திகதி - இந்தப் பிரேரணை மீதான விவாதம் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப் பிரேரணையின் வெற்றி,

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேசப் பயங்கரவாதத்துக்கு எதிரான அமெரிக்கப் போரில் புலிகளுக்கு விலக்கு!

## தூதரகப் பேச்சாளர் தகவல்

கொழும்பு,செப்ரெம்பர்24

**பயங்கரவாதத்தை முறியடிப்பதற்காக உலகளாவிய ரீதியில் பரந்த கூட்டணி ஒன்றை அமைத்துப் பெரும் போர் ஒன்றுக்குத் தயாராகி வரும் அமெரிக்கா, இந்தப் போரில் புலிகளுக்கு விலக்களித்திருப்பதாகக் கொழும்புச் செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டிருக்கின்றது.**

"பயங்கரவாதத்துக்கு எதிராக அமெரிக்கா அமைத்துவரும் பரந்த கூட்டணி காரணமாக இலங்கை இனப் பிரச்சினை தொடர்பான விவகாரத்தில் அமெரிக்க அரசின் நிலைப்பாடு மாற்றமடையாது. சமாதானத் தீர்வைக் காண்பதற்காக விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும் என்று இலங்கை அரசை வற்புறுத்தும் அதன் கொள்கையிலும் மாற்றம் ஏதும் இல்லை" - என்றும் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் ஸ்டீபன் கொல்கேற் தெரிவித்திருக்கின்றார்.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## திருத்தப் பிரேரணை மீது இன்றிரவு வாக்கெடுப்பு

கொழும்பு,செப்.24

நான்கு சுயாதீன ஆணைக்குழுக்களை அமைப்பது தொடர்பான அரசமைப்பு 17 ஆவது திருத்தப் பிரேரணை இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

இந்தத் திருத்தப் பிரேரணையில் இடம்பெறவேண்டிய திருத்தங்கள் குறித்து அரசுப் பிரதிநிதிகளும் ஜே.வி.பி. பிரதிநிதிகளும் நேற்றிரவு விரிவாக ஆராய்ந்தனர்.

அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு உறுப்பினர்களைத் தெரிவுசெய்தல், ஊடகத்துறையின் சுதந்திரமான செயற்பாடு ஆகியன குறித்து ஐ.தே.க. சமர்ப்பித்துள்ள திருத்தங்கள் பற்றியும் இந்தப் பேச்சில் ஆராயப்பட்டது. அங்கு எடுக்கப்பட்ட முடிவுகள் நேற்றிரவுவரை வெளியாகவில்லை.

இன்று காலை 9.30 மணிக்கு நாடாளுமன்றம் கூடும்போது இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு அதன் மீதான விவாதம் இரவு 9 மணிவரை இடம்பெறும். அதன்பின்னர் இரவு 9.15 மணிக்கு வாக்கெடுப்பு நடைபெறும். (ஐ-3-9)

### அரசமைப்புக்கான 17ஆவது திருத்தம்

## மூன்று தமிழ்க்கட்சிகள் பிரேரணையை பகிஷ்கரித்து வெளிநடப்புச் செய்யும்

கொழும்பு,செப்.24

17ஆவது திருத்தத்தின் கீழ் நான்கு சுயாதீன ஆணைக்குழுக்களை நியமிப்பது தொடர்பாக இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் பிரேரணை மீதான விவாதத்தைப் பகிஷ்கரித்து வெளிநடப்புச் செய்வதென தமிழ்க் கட்சிகள் முடிவுசெய்துள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்குழுக் கூட்டம் நேற்று மாலை கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் இடம்பெற்ற சமயம், 17ஆவது திருத்தப் பிரேரணையை ஆதரிப்பதால் தமிழ் மக்களுக்கு ஏற்படும் ஆதாயம் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இறுதியில் பிரேரணை விவாதத்தில் கலந்துகொள்ளாமல் வெளிநடப்புச் செய்வதென முடிவு செய்யப்பட்டது.

ரெலோ, அகில இலங்கைக் காங்கிரஸ் ஆகியவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இன்றைய விவாதத்தில் பங்குபற்றுவதில்லை என்று முடிவு செய்துள்ளனர்.

இந்த மூன்று தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் இன்று நாடாளுமன்றக் கட்டடத்தில் கூடவிருக்கின்றனர்.

அதன் பின்னர் விவாதம் ஆரம்பமாகும்போது தமது நிலைப்பாடு குறித்த ஓர் அறிக்கையை அங்கு வெளியிட்டபின் வெளிநடப்புச் செய்வதென அவர்கள் முடிவு செய்துள்ளனர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண ஒன்றிணைந்து செயற்பட முடியாத தேசியக்கட்சிகள், இந்த ஆணைக் குழுக்களை அமைக்கும் விடயத்தில் மட்டும் ஒன்றுபட்டுள்ளன. இந்த ஆணைக் குழுக்களால் தமக்கும் அரசியல் லாபம் இருப்பதால்தான் அவை ஒன்றுபட்டுள்ளன. தமிழ் மக்களுக்குப் பயன் இல்லாத இந்த ஆணைக்குழுக்களை அமைப்பதை நாம் ஆதரிக்க மாட்டோம் - என்று ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். (ஐ-3)

## பிரேரணையில் சில திருத்தங்களை ஐ.தே.கட்சி இன்று முன்வைக்கும்

கொழும்பு,செப்.24

நான்கு சுயாதீன ஆணைக் குழுக்களை அமைப்பது தொடர்பாக இன்று நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படும் 17 ஆவது திருத்தப் பிரேரணையை ஆதரிப்பதா இல்லையா என்பது குறித்து ஐ.தே.கட்சியின் நாடாளுமன்றக் குழு இன்று காலையே முடிவு செய்யவிருக்கின்றது.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத்தில் இன்று காலை கூடவுள்ள நாடாளுமன்றக் குழுவின் கூட்டத்தில் இது விடயமாக விரிவாக ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பிரேரணை மீது சில திருத்தங்களை ஐ.தே.கட்சி சமர்ப்பிக்கும் என்றும் -

அந்தத் திருத்தங்களை அரசு ஏற்பதைப் பொறுத்தே அதை ஆதரிப்பதா இல்லையா என்ற முடிவு அமையும் என்றும் -

அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணநாயக்க நேற்றிரவு தெரிவித்தார். (ஐ-3)

## மன்னாரில் இளைஞனின் சடலம்

மன்னார்,செப்.24

மன்னாரில் மூர் வீதி காட்டுப் பள்ளிவாசல் அருகில் நேற்றுமுன்தினம் காலை இளைஞர் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இச்சடலம் அடம்பன் பிரதேசத்தைச் சேர்ந்த ஆனந்தன் (வயது35) என்பவருடையது என்று அவரது உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

இச்சடலத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களோ அல்லது வேறுவிதமான காயங்களோ காணப்படவில்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு மன்னார் மாவட்ட நீதிவான் பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (ஐ-9)

### ஆப்கானிஸ்தானில்

## வேவு விமானத்தை இழந்ததை ஒப்புக்கொள்கிறது அமெரிக்கா

வாஷிங்ரன்,செப்.24

அமெரிக்காவின் வேவு விமானம் ஒன்று ஆப்கானிஸ்தான் பகுதியில் காணாமற் போய்விட்டதாக அமெரிக்கப் பாதுகாப்புத்துறைச் செயலர் டொனால்ட் ரம்ஸ் பீல்ட் தெரிவித்திருக்கிறார்.

ஆள்கள் இன்றிப் பறக்கும் வேவு விமானம் ஒன்றைத் தாங்கள் சுட்டு வீழ்த்தி விட்டதாக தலிபான்கள் நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தது தெரிந்ததே.

இந்நிலையில் தனது விமானம் ஒன்றை இழந்திருப்பதை அமெரிக்கா ஒப்புக்கொண்டுள்ளது.

இதேவேளை -

ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதலுக்கு நவீன தொழில்நுட்ப ஆயுதங்களைப் பயன்படுத்த உள்ளதாக அமெரிக்கப் பாதுகாப்புத்துறை தெரிவித்திருக்கிறது.

நில அறைகள், அகழிகள் என்பனவற்றுக்குள் ஒஸாமா பின்லேடன் ஒளிந்திருக்க வாய்ப்புள்ளதால் தரையைத் துளைத்துச் சென்று தாக்கும் குண்டுகளையும் அமெரிக்கப் படைகள் பயன்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## விஜேபால மெண்டிஸுக்கு மேல்மாகாண ஆளுநர் பதவி?

கொழும்பு,செப்.24

முன்னாள் அமைச்சர் விஜேபால மெண்டிஸை மேல்மாகாண சபையின ஆளுநராக நியமிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகக் கொழும்புச் செய்தி வட்டார்ங்கள் தெரிவித்தன.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பொ.ம.ஐ. முன்னணிக்கு கட்சி மாறிய விஜேபால மெண்டிஸுக்கு அண்மையில் புதிய அமைச்சரவையில் அமைச்சர் பதவி வழங்கப்பட்டதும -

அமைச்சர்களின் எண்ணிக்கை இருபதாக இருக்க வேண்டும் என்று ஜே.வி.பி. அரசை நிர்ப்பந்தித்து வந்ததால் பின்னர் அவரது அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டதும் -

தெரிந்தவையே.

இதனால் சீற்றமடைந்திருக்கும் அவர் மீண்டும் ஐ.தே.கட்சியில் இணைந்துகொள்ள இருப்பதாக செய்திகள் வெளியாகி இருந்தன.

அவர் மீண்டும் ஐதேகவில் இணைவதைத் தடுக்கவும் அவரைத் திருப்திப்படுத்தும் வகையிலும் மாகாண ஆளுநர் பதவியை அவருக்கு வழங்க அரசு ஆலோசித்து வருவதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# அமெரிக்காவில் இடம்பெற்ற கொடுமை
# உலகில் பிளவுகளை உருவாக்கக் கூடாது!

## தஜிகிஸ்தானில் புனித பாப்பரசர் தெரிவிப்பு

துஷான்பே,செப்.24

அழகான இந்த உலகம் மீண்டும் யுத்த அழிவுகளுக்கு உட்படக் கூடாது.

புனித பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் இவ்வாறு சர்வதேச சமூகத்திடம் கோரியிருக்கிறார்.

அமெரிக்காவில் நடத்தப்பட்ட கொடுமை உலகில் பிளவுகளை மேலும் ஆழப்படுத்துகின்ற செயல்களுக்கு நம்மை இட்டுச் செல்லக் கூடாது என்றும் பாப்பரசர் கூறியிருக்கிறார்.

மத்திய ஆசியக் குடியரசான தஜிகிஸ்தானுக்கு விஜயம் செய்திருக்கும் புனித பாப்பரசர் அங்கு பல்லாயிரக் கணக்கானோர் கூடியிருந்த பிரார்த்தனை நிகழ்வு ஒன்றில் இந்த வேண்டுகோளை விடுத்தார்.



ஆப்கானிஸ்தானின் எல்லையோரம் அமைந்துள்ள தஜிகிஸ்தானில் புனித பாப்பரசரின் விஜயம் முடியும்வரை ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதல்கள் ஆரம்பிக்கப்படமாட்டா என்று அமெரிக்க நிர்வாகம் உறுதி அளித்திருக்கிறது.

அதனை அடுத்தே திட்டமிட்டபடி பாப்பரசர் அங்கு விஜயம் செய்தார்.

ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதலில் ஈடுபடவுள்ள அமெரிக்கப்படைகள் தஜிகிஸ்தான் நாட்டையும் தளமாகப் பயன்படுத்தவுள்ளன.

துஷான்பேயில் பாப்பரசர் கலந்து கொண்ட நிகழ்ச்சிக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டது.

இவ்வுலகுக்கு அமைதியைத் தாரும் நம் ஆண்டவரே என உணர்வு பூர்வமாகக் குறிப்பிட்ட பாப்பரசர், மதங்கள் ஒருபோதும் மனிதர்களிடையே பிளவுக்குக் காரணமாகிவிடக் கூடாது என்றார்.

பேதங்களுக்கோ, வன்முறைக்கோ, வெறுப்புக்கோ இங்கு இடமில்லை. கிறிஸ்தவன், இஸ்லாமியன் எல்லோருக்கும் தந்தையான ஒரே கடவுள் தந்த அழகான உலகம் இது. வன்முறைக் கலாசாரத்தை அல்ல; அன்பின் கலாசாரத்தை இங்கு உருவாக்குவோம் - என்றும் பாப்பரசர் அங்கு தெரிவித்திருக்கிறார். (ஐ-9)



சர்வதேச மரம் நடுகை மாதத்தை ஒட்டி கொக்குவில் லயன்ஸ் கழகத்தினர் அண்மையில் வைபவம் ஒன்றை நடத்தினர். லயன்ஸ் கழகங்களின் வலயத் தலைவர் லயன் தேவராஜா மரக்கன்று ஒன்றை நடுவதைப் படத்தில் காணலாம். கழகத்தலைவர் லயன் செ.சிவலிங்கம், முன்னாள் தலைவர் க.மு.பத்மநாதன், லயன் சீமாட்டி திருமதி தேவராஜா, மாவட்டத் தலைவர் லயன் டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம், கழகப் பொருளாளர் லயன் ஏ.சிறிகாந்தன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (ஐ)

### யாழ். போதனா ஆஸ்பத்திரியில்
## ஆய்வுகூட நுண்ணுயிரியல் பிரிவு மீண்டும் இயங்கத் தொடங்கியது

யாழ்ப்பாணம்,செப்.24

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூட நுண்ணுயிரியல் பிரிவு கடந்த வாரம் முதல் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளது.

ஆய்வுகூடத் தொழில்நுட்பவியலாளர் வெற்றிடங்கள் பல நிரப்பப்படாமல் இருந்துவந்ததால், கடந்த காலங்களில் இந்தப் பிரிவின் செயற்பாடுகள் ஸ்தம்பித்துப் போயிருந்தன.

ஆஸ்பத்திரி நிர்வாகம் எடுத்த நடவடிக்கையை அடுத்து ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் பலர் அண்மையில் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றனர். இதனையடுத்து நுண்ணுயிரியறபிரிவு மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளது. (ஐ-15)

## பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவருக்கு உதவி!

பருத்தித்துறை,செப்.24

பாடசாலையிலிருந்து இடைவிலகிய மாணவர்களுக்கு 'யுனிசெவ்' நிறுவனம் உதவி செய்ய முன்வந்துள்ளது.

நீண்ட நாள்களாகப் பாடசாலைகளுக்குச் சமுகம் கொடுக்காத மாணவர்களின் விவரங்களை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்திருக்கிறார். (ஐ-118)

## பட்டினிக்கு எதிரான நிறுவனம் மலசலகூடம் அமைக்க உதவி

தென்மராட்சி,செப்.24

வடமராட்சி பிரதேசத்தில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள நலன்புரி முகாம்களில் பட்டினிக்கு எதிரான இயக்க நிறுவனத்தினால் 35மலசல கூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை பிதேச செயலர் பிரிவில் 27 மலசல கூடங்களும் கரவெட்டி பிதேச செயலர் பிரிவில் 8 மலசல கூடங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை முனை முகாம்களில் 10 மலகூடங்களும் துன்னாலை வடக்கு மாதா கோயில் முகாமில் 9 மலகூடங்களும் பொலி கண்டி முகாமில் 8 மலகூடங்களும் கரவெட்டி செங்குந்த முகாமில 6 மலகூடங்களும் கட்டைவேலி முகாமில் இரண்டு மலகூடங்களும் அமைக்கப்பட்டு வருவதாக நிறுவன வெளிக்கள அதிகாரி தெரிவித்தார். (ஐ-117)

## கிரான் பொதுச் சந்தையில் கிரனேட் வீச்சு! துப்பாக்கிச் சூடு!
### பொதுமக்கள் மூவர் காயம்

மட்டக்களப்பு,செப்.24

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான பொதுச் சந்தைக்கு அருகில் நேற்றுக்காலை 10 மணியளவில் இடம்பெற்ற கிரனேட்வீச்சு மற்றும் துப்பாககிப் பிரயோக சம்பவத்தில் மூன்று பொதுமக்கள் காயமடைந்தனர்.

பொதுச்சந்தைக்கு அருகில் உள்ள சோதனைச் சாவடியில் காவலில் நின்ற படையினர்மீது கிரனேட் வீசப்பட்டதாகவும் -

அதையடுத்து பரவலாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த மூவரும் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து சந்தையில் கூடியிருந்தவர்கள் பாதுகாப்புத் தேடி ஓடினர். அங்கு பரபரப்பான சூழ்நிலை காணப்பட்டது.

இதேவேளை -

சித்தாண்டி நாகதம்பிரான் ஆலயத்துக்கு அருகில் உள்ள படையினரின் சோதனைச் சாவடியில் இருந்து விடுதலைப் புலிகளின் பிரதேசமான சந்தனமடு நோக்கி நேற்றுககாலை துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

### வெலிஓயாவுக்குத் தெற்கே
## ஊர்காவலர் அணி மீது கிளைமோர் தாக்குதல்!

கொழும்பு,செப்.24

வெலிஓயாவுக்குத் தெற்கே 18 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள போகஸ்கண்டியப் பகுதியில் கடந்த சனிக்கிழமை காலை 6.45 மணியளவில், இரவுக் கடமையை முடித்துத் திரும்பிக் கொண்டிருந்த ஊர்காவலர் அணி ஒன்றை இலக்கு வைத்து விடுதலைப் புலிகள் கிளைமோர் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகின்றது.

இத்தாக்குதலில் ஊர்காவலர் ஒருவர் பலியானார்; மற்றொரு ஊர்காவலர் காயமடைந்தார்.

காயமுற்றவர் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## இருவர் தடுத்து வைப்பு

யாழ்ப்பாணம்,செப்.24

கடந்த புதன் மற்றும் வியாழன் ஆகிய இரு தினங்களிலும் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்ட இருவர் காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் பொலீஸாரால் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நாராயணபிள்ளை சந்திரசேகர் சுதர்சன், சந்திரன் நிரோஷன் ஆகிய இருவருமே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## வெல்லாவெளியை நோக்கி நேற்றுப் படை நடவடிக்கை

மட்டக்களப்பு,செப்.24

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான வெல்லாவெளியை நோக்கி நேற்றுக் காலை படை நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

சித்தாண்டி இராணுவமுகாமில் இருந்து நேற்று அதிகாலை கனரக ஆயுதங்கள் சகிதம் படையினர் மேற கொண்ட இந்த நடவடிக்கை மாலையில் பூர்த்தியானதாகத் தெரிவிக்கப்பட்டது.

உறுகாமம், 40 ஆம் கொலனி ஆகிய கிராமங்கள் வரை படையினர் முன்னேறிச்சென்றதாகவும் -

புலிகள் தரப்பில் எந்தவித எதிர்த தாக்குதல்களும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் - தெரிவிக்கப்பட்டது.

## பிறப்புச் சான்றிதழ் பெறுவதற்கு உதவி

தென்மராட்சி,செப்.24

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் பிறப்புச் சான்றிதழ் சமர்ப்பிக்காமல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இலவசமாகப் பிறப்புச் சான்றிதழ் பெற்றுக்கொடுக்க சிறுவர் பாதுகாப்புநிதியம் நிதியுதவி வழங்கியுள்ளது.

இதுவரை பிறப்புச் சான்றிதழ் சமர்ப்பிக்காமல் கல்வி பயிலும் மாணவர்களின் பெயர், பெற்றோரின் பெயர், பிறந்த திகதி, பிறந்த இடம் ஆகிய விவரங்களை அனுப்பிவைக்குமாறு வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா அறிவித்துள்ளார். (ஐ-117)

## அரியாலையில் படைநிலைகள் மீது புலிகள் தாக்கியதில் சிப்பாய் பலி!

யாழ்ப்பாணம்,செப்.24

கடந்த சனிக்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் யாழ்ப்பாணத்துக்குக் கிழக்கே, 5 கிலோ மீற்றர் தொலைவில், குடாக்கடலை ஒட்டிய அரியாலைப் பகுதியில் உள்ள பாதுகாப்பு நிலைகள் மீது விடுதலைப் புலிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் இரு படையினர் காயமடைந்தனர்; அவர்களில் ஒருவர் பின்னர் உயிரிழந்தார்.

விசேட ஊடகத் தகவல் மையம் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகளின் நகர்வுகளைக் கண்காணித்த படையினர் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

போலியோ தடுப்பு மருந்து வழங்கலுக்காக மோதல் நிறுத்தப்பட்டிருந்ததால் படையினர் திருப்பித் தாக்கவில்லை.

குடாக்கடலுக்கு முன்னால் உள்ள இந்தப் பிரதேசத்தில் பின்னர் தேடுதல் நடத்திய படையினர் ரி-56 ரக ஆயுதம் ஒன்றையும், இரண்டு மகஸின்களையும், 21 சுற்று ரி-56 ரக ரவைகளையும், நீந்துபடகாகப் பயனபடுத்தப்பட்ட 'ரிஜிபோம்' துண்டுகள் இரண்டையும் கண்டுபிடித்தனர்.

- இப்படி ஊடகத் தகவல் மையம் மேலும் தெரிவித்தது. (உ)

## சர்வதேசப் பயங்கரவாதத்துக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவினால் பயங்கரவாத இயக்கங்களாகப் பட்டியலிடப்பட்ட 30 அமைப்புக்களில் புலிகள் இயக்கமும் அடங்குகின்றது.

இந்நிலையில் -

கடந்த 11 ஆம் திகதி அமெரிக்கா மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களை அடுத்து உலகப் பயங்கரவாத இயக்கங்களுக்கு எதிராக, அமெரிக்கா பெரும் தாக்குதல் ஒன்றுக்குத் தயாராகி வருகின்றது. இதன் தொடரில் விடுதலைப் புலிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட இடமுண்டா என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

"பயங்கரவாதத்துக்குப் பாதுகாப்புக் கொடுத்து ஊக்குவிக்கும் நாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவே அமெரிக்க தயாராகி வருகின்றது. இவற்றுக்கும் புலிகளுக்கும் இடையில் தெளிவான வேறுபாடு உண்டு" - என்று ஸ்ரீபன் கொல்கேற் தெரிவித்தார்.

"அமெரிக்காவைப் பொறுத்தவரை விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு தனியான குறியிலக்கு அல்ல. எந்தக் கோரிக்கையும் முன்வைக்காமல், சமரசப் பேச்சுக்களுக்கும் முன்வராமல், அமெரிக்கர்களைக் கொல்வதையே நோக்கமாகக் கொண்ட பயங்கரவாதிகளுக்கு எதிராகவே அமெரிக்கா போர் தொடுக்கின்றது" என்றும் கொல்கேற் தெளிவுபடுத்தினார்.

"விடுதலைப் புலிகளுக்கும் மத்திய கிழக்கின் பயங்கரவாதிகளுக்குமிடையே வேறுபாடு இருக்கின்றது. இதனால், இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும் என்ற அமெரிக்காவின் நிலைப்பாடு மாற்றப்படவில்லை" என்றும் அவர் கூறினார்.

இதேசமயம் -

விடுதலைப் புலிகளுடன் பின்லேடனின் 'அல்குவேடா' இயக்கம் தொடர்புகளைக் கொண்டுள்ளதா என்பதை அறியும் நோக்கில் அமெரிக்காவின் எவ்.பி.ஐ. புலனாய்வுப் பணியகம் இலங்கை உட்பட்ட பல ஆசியநாடுகளைத் தொடர்பு கொண்டு விசாரித்துள்ளதாக அறியவந்துள்ளது.

அவ்வாறு நம்புவதற்கான தகவலகள் எதுவும் இல்லை என்று அரச புலனாய்வு நிறுவனங்கள் தெரிவிப்பதாக அதிகார பூர்வ வட்டாரங்கள் கூறுகின்றன.

- இப்படித் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## இராஜினாமாவை ஏற்பதில்லையென முடிவு

அரியாலை,செப்.24

யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்தின் இராஜினாமாவை ஏற்றுக்கொள்வதில்லை என்று சமாசம் முடிவு செய்துள்ளது.

சமாசத்தின் இயக்குநர் சபை நேற்று முற்பகல் 11 மணிக்குக் கூடி இது விடயம் குறித்து ஆராய்ந்தது.

ச.வீ.கே.சிவஞானத்தின் இராஜினாமாவை ஏற்பதில்லை என்று சபை ஏகமனதாக முடிவு செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

தனிப்பட்ட காரணங்களுக்காக யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் பதவியில் இருந்து விலகுவது என்று சீ.வீ.கே.சிவஞானம் கடந்த வாரம் அறிவித்திருந்தது தெரிந்ததே. (ஐ-17)

### மருந்து மாறிக் கொடுத்ததால்
## குழந்தை உயிரிழந்த சம்பவம்; விசாரணை நடத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.24

சுழிபுரம் பகுதியில் தனியார் வைத்தியர் ஒருவர் மருந்தை மாற்றிக் கொடுத்ததால் குழந்தை ஒன்று பரிதாபகரமாக மரணமான சம்பவம் தொடர்பாக உடனடியாக நீதி விசாரணை நடத்த வேண்டும் என்று வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் என். திரிலோகநாதன் யாழ்மாவட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இறந்த குழந்தையின் வீட்டுக்கு விசாரணை நடத்தச் சென்ற பொலீஸார் அங்கு அவர்களுடன் நடந்துகொண்ட விதம குறித்தும் திரிலோகநாதன் தனது அதிருப்தியைத் தெரிவித்திருக்கிறார். பாதிக்கப்பட்டோரின் மனம் புண்படும் வகையில் பொலீஸார் நடந்து கொண்டதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

இதேவேளை, சம்பந்தப்பட்ட வைத்தியர் அந்தப் பகுதியில் இயங்கும் அரச மருந்தகத்தில் பணிபுரிபவர் என்றும் -

அவரை அங்கிருந்து வேறு இடத்துக்கு இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும -

திரிலோகநாதன் வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தெரிவித்திருக்கிறார். (ஐ-3)

## கராத்தே பயிற்சிப் பட்டறை

வலி.தென்மேற்கு,செப்.24

சோட்டோகான் கராத்தே டு சர்வதேச சம்மேளனம் நாடளாவிய ரீதியில் எதிர்வரும் 29 ஆம், 30 ஆம் திகதிகளில் கராத்தே மற்றும் கராத்தே மத்தியஸ்தர்களுக்கான பயிற்சிப் பட்டறையை நடத்தவுள்ளது. (ஐ-185)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கா நடைமுறைப்படுத்தியிருந்த

# இந்தியா, பாகிஸ்தான் மீதான தடைகள் அனைத்தும் நீக்கம்

வாஷிங்ரன்,செப்.24

இந்தியா மற்றும் பாகிஸ்தான் மீதான தனது தடைகளை அமெரிக்கா நீக்கியது. 'நீதிக்கான வரைமுறையற்ற நடவடிக்கைக்கு' இந்த இருநாடுகளும் உதவுவதற்கு பிரதியுபகாரமாகவே அமெரிக்கா இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இந்தியா மீதும் பாகிஸ்தான் மீதும் 'மேன்' ஒப்பந்தத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள தடைகளை உடனே விலக்கிக்கொள்வதாக அமெரிக்க அதிபர் புஷ் நேற்று முடிவு செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அணுகுண்டு சோதனை நடத்தியதற்காக இந்த இரு நாடுகள் மீது பொருளாதார, இராணுவத் தடைகளை அமெரிக்கா விதித்திருந்தது. மேலதிகமாக, பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சி கவிழ்க்கப்பட்டதற்காகவும் சில தடைகள் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தன.

தற்போது தடைகள் நீக்கப்பட்டிருப்பதால் -

சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து உடனடியாக உதவிகளைப் பெறவும் -

அதிகளவில் இராணுவப் பரிமாற்றங்கள் இடம்பெறவும், பாதுகாப்புத் துறையில் ஒத்துழைப்புகளைப் பெறவும் -

இந்திய, பாகிஸ்தானிய ஆராய்ச்சி நிறுவனங்கள் அமெரிக்க நிறுவனங்களுடன் ஒத்துழைக்கவும் - இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் வழியேற்பட்டுள்ளது.

பயங்கரவாதத்துக்கு எதிராக அமெரிக்கா நடத்தவுள்ள போருக்கு, இடையூறற்ற ஒத்துழைப்பை இந்த இரு நாடுகளிலிருந்தும் பெறுவதற்கு - இராணுவ ஒத்துழைப்பை வழங்குவதற்கு - அமெரிக்கா விதித்த தடைகள் முட்டுக்கட்டையாக இருந்தாலேயே அதிபர் புஷ் தடைகளை விலக்கத் தீர்மானித்ததாக கூறப்படுகிறது.

அணு ஆயுத வல்லரசான அமெரிக்கா, இந்தியாவும் பாகிஸ்தானும் புதிய அணு ஆயுத நாடுகளாக உருவாவதை விரும்பாததாலேயே, அவை மீது தடைகளை விதித்தது குறிப்பிடத்தக்கது. (ஒ)

உலக அரங்கில்

புஷ் - புடின் உரையாடலையடுத்து

## அமெரிக்கப் போர் விமானங்கள் உஸ்பெகிஸ்தானில் தரையிறங்கின

முன்னாள் சோவியத் ஒன்றிய குடியரசான உஸ்பெகிஸதானில் அமெரிக்க இராணுவ விமானங்கள் நேற்று முதல் தரையிறங்கத் தொடங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ஆப்கானிஸ்தானில் ஆளும் தலிபான்களை எதிர்க்கும் வடக்கு கூட்டணியின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேச எல்லையில் உஸ்பெகிஸ்தான் இருப்பதால் தலிபான்களுக்கு எதிராக அமெரிக்கா மேற்கொள்ள உத்தேசித்துள்ள இராணுவ நடவடிக்கைகளுக்கு உஸ்பெகிஸ்தான் கேந்திர நிலையமாக விளங்கும் என்று இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

உஸ்பெகிஸ்தான் தலைநகர் தாஜ்கண்ட் அருகே, மத்திய விமானக் கட்டுப்பாடு மற்றும் தகவல் தொடர்பு மையமொன்றை அமெரிக்கா அமைத்து வருவதாகவும் கூறப்படுகிறது.

முன்னதாக, ஆசியப் பகுதியில் அமெரிக்க இராணுவம் தரையிறங்க அனுமதிக்க வேண்டாமென்று கோரிய ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுடன் அமெரிக்க அதிபர் புஷ் நேற்றுமுன்தினம் சுமார் 40 நிமிடங்கள் தொலைபேசி மூலம் உரையாடியதாகவும் - அதன் பின்னரே அமெரிக்க விமானங்கள் உஸ்பெகிஸ்தானில் தரையிறங்கியதாகவும் - கூறப்படுகிறது. (ஒ)



விமானத் தற்கொலைத் தாக்குதல்களையடுத்து அமெரிக்க விமான நிலையங்களில் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன.

தாக்குதல்கள் நடத்தப் பயன்படுத்தப்பட்ட விமானங்களை தற்கொலை தாக்குதலாளிகள் கத்தியைக் காட்டிக் கடத்தியதாக தெரியவந்ததையடுத்து சவர பிளேடுகள், நகம்வெட்டிகள், பழம்வெட்டும் சிறிய கத்திகள், கத்தரிக்கோல் போன்ற பொருள்களை விமானங்களில் எடுத்துச் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான சுமார் ஐயாயிரம் பொருள்கள் தினமும் ஒவ்வொரு விமான நிலையத்திலும் பறிமுதல் செய்யப்படுகின்றன.

அமெரிக்க விமான நிலையம் ஒன்றில் அப்படிக் கைப்பற்றப்பட்ட பொருள்களை படத்தில் காணலாம்.

மனைவி, மக்களை வேறிடத்தில் விட்டு

## ஆண்கள் புனிதப் போரில் ஈடுபட ஆப்கானிஸ்தானில் குவிகின்றனர்!

காபூல்,செப்.24

அமெரிக்கா தாக்குதல் நடத்தக் கூடும் என்ற அச்சத்தால் ஆப்கானிஸ்தானை விட்டு குடும்பத்துடன் வெளியேறியதாகக் கூறப்பட்ட ஆப்கானிய ஆண்கள் தற்போது மீண்டும் ஆப்கானிஸ்தானுக்குத் திரும்பிக் கொண்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

முன்னதாக ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறிய இவர்கள் தமது மனைவி, மக்களை பாகிஸ்தான் உட்பட பக்கத்து நாடுகளில் உள்ள அகதி முகாம்களில் அல்லது உறவினர் இல்லங்களில் தங்க வைத்துவிட்டு ஆப்கானிஸ்தானுக்குத் திரும்பிக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்காவுக்கு எதிரான 'ஜிகாத்' புனித யுத்தத்தில் ஈடுபடுவதற்காகவே இவர்கள் ஆப்கானிஸ்தானுக்குத் திரும்புவதாகவும் -

இவர்களுடைய குடும்பங்களை தங்க வைத்துள்ள நாடுகளிலிருந்தும் அதிகளவில் ஆண்கள் ஆப்கானிஸ்தானியர்களுடன் சேர்ந்து ஆப்கானிஸ்தானுக்கு வந்து கொண்டிருப்பதாகவும் - நேரில் கண்ட செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்கா, ஆப்கானிஸ்தான் மீது நடத்தும் தாக்குதல் என்பதைவிட, இஸ்லாத்துக்கு எதிரான மற்றொரு மதத்தவரின் போர் முழக்கமாக அமெரிக்க நடவடிக்கை பரிணமித்துள்ளதையே இது காட்டுவதாக அவதானிகள் கருதுகின்றனர். (ஒ)

## மேற்காசிய அமைதி முயற்சியில் ஐரோப்பிய சமூகப் பிரதிநிதிகள்

தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளை ஆரம்பிக்க அமெரிக்கா எடுத்துவரும் முயற்சிகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில், மேற்காசியப் பிராந்தியத்தில் அமைதியை ஏற்படுத்த துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் ஐரோப்பிய சமூகத்தின் உயர்மட்டப் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

மத்தியகிழக்கு நாடுகளுக்கு விஜயம் செய்யும் இந்தக் குழு, இஸ்ரேலிய, பலஸ்தீன மோதல்களை முடிவுக்குக் கொண்டுவருவது பற்றியும் -

அங்கு நிரந்தர அமைதித் தீர்வொன்றை நடைமுறைப்படுத்துவது பற்றியும் - மத்திய கிழக்கு நாடுகளின் தலைவர்களுடன் ஆலோசனைகளை நடத்தவுள்ளது.

இஸ்ரேலிய பலஸ்தீனத் தரப்புகளிடையேயான சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்க இந்தக் குழு ஆவனசெய்யுமென்றும் -

பலஸ்தீனக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து, இஸ்ரேலியப் படையினரை பின்வாங்கும் படி இக்குழு கோரும் எனவும் -

குழுவுக்குத் தலைமை வகிக்கும் பெல்ஜிய வெளிவிவகார அமைச்சர் டெனிஸ் மைகேல் தெரிவித்துள்ளார். (ஒ-4)

## தற்கொலைத் தாக்குதலாளிகளை அடையாளம் காண்பதில் குழப்பம்!

### விழி பிதுங்கி நிற்கிறது எவ்.பி.ஐ.

வாஷிங்ரன்.செப்24

அமெரிக்க விமானத் தற்கொலைத் தாக்குதலில் ஈடுபட்டு உயிரிழந்ததாகக் கூறப்பட்ட சிலர் உயிருடன் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து அமெரிக்க புலனாய்வு அதிகாரிகள் பெரும் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளதாக 'வாஷிங்ரன் போஸ்ட்' பத்திரிகை தெரிவித்தது.

நியூயோர்க் உலக வர்த்தக மையக் கட்டடத்தில் மோதிய ஒரு விமானத்திலிருந்ததாக 4 தற்கொலைத் தாக்குதலாளிகளின் பெயர் விவரங்களை அமெரிக்க புலனாய்வுக் கழகம் (எவ்.பி.ஐ) வெளியிட்டிருந்தது.

ஆனால் சம்பந்தப்பட்ட அந்த நபர்கள் சவூதிஅரேபியாவிலும், டியூனிஸியாவிலும் உயிருடன் இருப்பது தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் விமானத்தைக் கடத்தியவர்கள் யாரென்பதை சரியாக அடையாளம் காண்பதில் எவ்.பி.ஐ. குழம்பிப்போயுள்ளதாகக் கூறப்படுகிறது.

'வாஷிங்ரன் போஸ்ட்' பத்திரிகைக்கு பேட்டியளித்த எவ்.பி.ஐயின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் இதனை ஒப்புக்கொண்டுள்ளார்.

விமானங்களைக் கடத்திய தற்கொலைத் தாக்குதலாளிகள் தொடர்பாக ஏற்கனவே வெளியான விவரங்களில் தற்போது பெரும் சந்தேகம் எழுந்துள்ளதாகவும் -

ஒஸாமா பின்லேடனே தாக்குதல்களுக்குக் காரணம் என்று அமெரிக்கா அடித்துக் கூறிவரும் நிலையில், தாக்குதல் நடத்தியவர்களை அடையாளம் கண்டதில் ஏற்பட்ட குழப்ப நிலை, அமெரிக்காவுக்கு உலக அரங்கில் தர்மசங்கடத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

'ஆப்கானுடன் விஷப்பரீட்சை வேண்டாம்'

## முன்னாள் சோவியத் தளபதிகள் அமெரிக்க அரசுக்கு அறிவுரை

மொஸ்கோ,செப்.24

ஆப்கானிஸ்தானில் முழு அளவிலான போர் நடவடிக்கை ஒன்றை அமெரிக்கா ஆரம்பிப்பது மடமை மிகுந்த செயல்.

ஆப்கானிஸ்தானில் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்ட சோவியத் ஒன்றியத்தின் முன்னாள் படை அதிகாரிகள் இவ்வாறு அமெரிக்காவுக்கு ஆலோசனை கூறியுள்ளனர்.

பெருமளவு செலவுடன் சுமார் 9வருட காலமாக ஆப்கானிஸ்தானில் சோவியத் ஒன்றியம் நடத்திய 'இராணுவ சாகஸங்கள்' பற்றிய துயரமான நினைவுகள் மனதை வாட்ட, தமது எதிரியாக விளங்கும் அமெரிக்காவுக்கு இந்த அறிவுரையை முன்னாள் சோவியத் தளபதிகள் வழங்கியுள்ளனர்.

1989இல் ஆப்கானிஸ்தானிலிருந்து தோல்வியுடன் நாடு திரும்பிய சோவியத் படைகளுக்கு தலைமை தாங்கிய ஜெனரல் போரிஸ் குரோமோவ் "9 வருட சமரில் சுமார் 15 ஆயிரம் துருப்பினரை பலிகொடுத்தோம். இத்தகையதொரு விபரீதத்திலிருந்து அமெரிக்காவால் தப்ப முடியும் என்று நான் நினைக்கவில்லை" என்று தெரிவித்தார்.

"நாம் செய்த தவறை திருப்பிச் செய்யவே அமெரிக்கா தயாராகிறது. இராணுவ வழிவகைகள் மூலம் ஆப்கானிஸ்தானை வெல்வதோ அல்லது கட்டுப்படுத்துவதோ சாத்தியமானதல்ல" என்று ஆப்கானிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதியின் இராணுவ ஆலோசகராகப் பணியாற்றிய ஜெனரல் மாக்முட் கராயேல் பத்திரிகைப் பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

கெரில்லாக்களுக்கு எதிராக ஆப்கானிஸ்தானின் கரடுமுரடான மலைப் பிராந்தியத்தில் சண்டையிடுவது என்பது மிகக் கசப்பான அனுபவம் என்று 1989இல் ஆப்கானிஸ்தானிலிருந்து கடைசியாக வெளியேறிய சோவியத் வீரர் குரோமோஸ் ரஷ்யப் பத்திரிகை ஒன்றில் எழுதியிருந்தார்.

"கரடுமுரடான மலைப் பிராந்தியத்தில் எந்தவொரு தரை நடவடிக்கைக்கும் தொலைத்தொடர்பும், விநியோக மார்க்கங்களும் மிக முக்கியமானவை. ஆப்கானிஸ்தானில் சோவியத் ஒன்றியத்தில் 5 படைப் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் ஒரு இலட்சம் துருப்புக்கள் இருந்தன. ஆனால் அவற்றில் வெறும் 18ஆயிரம் பேரை மட்டுமே மோதலில் ஈடுபடுத்த முடிந்தது. மற்றவர்களை வீதிகள், தளங்கள், தொலைத்தொடர்பு மையங்கள் போன்றவற்றைப் பாதுகாப்[illegible]படுத்த வேண்டிய கட்டாயம் இருந்தது" என்று 'ஒப்ஸ்ஹாயா கசெடா' என்ற பத்திரிகையில் சோவியத் தளபதி ஒருவர் தெரிவித்திருந்தார்.

"நிச்சயமான சில தோல்விகள் அமெரிக்காவுக்காகக் காத்திருக்கின்றன" என்று ரஷ்ய மேல்சபைப் பாதுகாப்புக் குழுவின் உபதலைவர் ஜெனரல் விளாடிமீர் குளோகோ கூறியுள்ளார்.

"ஒஸாமா பின்லேடனும் அவரது ஆதரவாளர்களும் மறைந்துள்ள இடத்தைக் கண்டுபிடித்து, விசேட படை நடவடிக்கை மூலம் அவர்களைக் கைதுசெய்ய அமெரிக்கா முயற்சிப்பதே புத்திசாலித்தனமான செயல்" என்றும் குளோகோ தெரிவித்தார்.

இதேசமயம், சோவியத் எல்லைப் படையின் முன்னாள் பிரதித் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் போரிஸ் அகாபோவ் "பின்லேடனின் கைதுடன் பிரச்சினை முடிந்துவிடப்போவதில்லை" என்று கூறியுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் தோல்வியடைந்து சோவியத் துருப்புகள் திரும்பிய சமயம், அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் ரஷ்யாவைப் பார்த்து 'இப்படி நேருமென்று முன்னரே நாம் உங்களுக்குச் சொன்னோமே?' என்று கூறின.

இதே [illegible] தாவும் கேட்கவேண்டியிருக்கும் என்பதே முன்னாள் சோவியத் இராணுவ அதிகாரிகளின் கருத்தாகும்.

## இந்தியாவின் கேரள மாநிலத்தில் பின்லேடனுக்கு ரசிகர் மன்றம்

இந்தியாவில் இஸ்லாமியத் தீவிரவாதி ஒஸாமா பின்லேடனுக்கு ரசிகர் மன்றம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கேரள மாநிலம் பொன்னாணி நகரிலேயே பின்லேடனின் ரசிகர்கள் ஒன்றுகூடி மன்றம் ஒன்றை அமைத்துள்ளனர்.

ஆனால் மன்றத்தை ஆரம்பித்தவர்கள் தாம் யார் என்பதை அடையாளம்காட்ட மறுத்துவிட்டதாகவும்-

தொலைபேசி மூலம் பத்திரிகைகளுக்கு மன்றம் ஆரம்பிக்கப்பட்ட விடயத்தை அவர்கள் தெரிவித்ததாகவும் - கூறப்படுகிறது.

பின்லேடன் பெயரில் ரசிகர் மன்றம் தொடங்கியதால் ஏற்படக்கூடிய விளைவுகளைச் சந்திக்கத் தாம் தயாராக உள்ளதாகவும் பின்லேடன் ரசிகர்கள் கூறியுள்ளனர்.

இந்தியாவில் கல்வியறிவு அதிகம்பெற்ற மாநிலம் கேரளா என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

## பொதுநலவாய அமைப்பிலிருந்து பிஜி வெளியேற்றப்படும் அபாயம்!

பிஜி அமைச்சரவையில் சிறுபான்மை மக்கள் சேர்க்கப்படாததால், அந்த நாடு பொதுநலவாய நாடுகளின் கூட்டமைப்பிலிருந்து வெளியேற்றப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

பிஜியில் 1997ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட புதிய அரசமைப்பு விதிகளின்படி, சிறுபான்மை இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அமைச்சரவை அமைக்கப்படுவது கட்டாயமாகும்.

சமீபத்தில் இடம்பெற்றபொதுத் தேர்தலையடுத்து அரசமைத்த பிஜி பூர்வீகக் குடியைச் சேர்ந்த பிரதமர் லைசீனிய கராசே புதிய அரசமைப்பு விதிகளை புறக்கணித்துவிட்டு அமைச்சரவையை அமைத்துள்ளார்.

சிறுபான்மையினர்-குறிப்பாக இந்திய வம்சாவளியினர் - அமைச்சரவையில் இடம்பெறக்கூடாது என்பதில் பிரதமர் கராசே பிடிவாதமாக உள்ளார்.

இந்த நிலையில், அரசமைப்பின்படி ஆட்சி அமைக்கத் தவறினால் பிஜி, பொதுநலவாய அமைப்பின் குழு உறுப்பினராகத் தொடரமுடியாதென்று, அந்த அமைப்பின் தலைமைச் செயலர் கூறியுள்ளார்.(ஒ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ. நா. தூதரக நிதியுதவியுடன்

# உளநலம் பாதிப்புற்றோருக்கு விவசாயத் தொழில் நடவடிக்கை

வலி. வடக்கு, செப். 24

தெல்லிப்பளை உள நலச் சங்கம், உளநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தொழில் வழிச் சிகிசசையின் கீழ் விவசாய தொழில் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது

இந் நடவடிக்கையின் கீழ் உளநலம் பாதிக்கப்பட்டவர்களில் ஒரு பகுதியினர் இந்தச் சிகிச்சையின் கீழ் பயன்பாட்டைப் பெற்று வருகின்றார்கள்.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் நிதி உதவியுடன் இந்த தொழில் வழிச் சிகிச்சைக்கான விவசாய செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக உளநலத்துறை பேராசிரியர் தயா சோமசுந்தரத்தின் வழிகாட்டலின் கீழ் இம்முயற்சி முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது,

கிருமிநாசினிகளின் பயன்பாடு இன்றி இந்த விவசாய முயற்சி மேற் கொள்ளப்படுகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும், (க-86)

## பத்தாம் ஆண்டு நிறைவு விழாவில்

# பேக்கரி உரிமையாளர் சங்க சமூக சேவைகளுக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், செப் 24

''பாண் உற்பத்திக்கான மூலப்பொருள்களை வழங்குவதோடு மட்டும் நின்றுவிடாது கல்வி மற்றும் சமூக சேவைகளில் ஈடுபடும் பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் பணி பாராட்டுதற்குரியது''-என்று யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் பத்தாம் ஆண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய மக்கள் வங்கி முகாமையாளர் க. பாலச்சந்திரன் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், கூறியதாவது:-

1991 ஆம் ஆண்டு இச்சங்கம் தாபிக்கப்பட்ட பின்னர் தான் பேக்கரி உற்பத்திகளை தரமாகவும், வேகமாகவும் மக்கள் பெற முடிந்தது. ஊழலற்ற நிர்வாகம், சீரான கணக்கியல், முகாமைத்துவம், உறுப்பினர்களின் பேராதரவு போன்ற காரணங்களால் பத்து ஆண்டுகள் உறுதியான சேவையை இச்சங்கம் ஆற்றி வருகின்றது.

ஒரு கம்பனி எனப்பதிவு செய்யப்பட்ட இச்சங்கம் லாப நோக்கம் கொண்டு செயற்படாமல் பல சமூகப்பணிகளில் ஈடுபட்டுவருகின்றது. இந்த வருடம் விளையாட்டு நிகழ்வுகளை ஊக்குவித்து பரிசில்களையும் சங்கம் வழங்கியுள்ளது.பத்து வருடங்களை நிறைவு செய்யும் இச்சங்கத்தின் பணி மேலும் வலுவடைய வாழ்த்துகிறேன் என்று கூறினார்.

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் சி. சுந்தரலிங்கம் தலைமையில் புதன்கிழமை நடைபெற்ற இவ்விழாவில் முன்னதாக சாப்பாய் லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் மருத்துவ சிகிச்சை முகாம் நடைபெற்றது. (க-ரி)

## மாணவருக்கான கட்டுரைப் போட்டி

வலிகாமம்தெற்கு, செப். 24

இனவிருத்திச் சுகாதாரக் கல்விச் செயற்றிட்டத்தின் கீழ் சனத்தொகை மற்றும் குடும்ப வாழ்க்கை பற்றிய கட்டுரைப் போட்டி ஒன்று தேசிய மட்டத்தில் நடத்தப்பட உள்ளது.

பாடசாலைகளில் 9, 10, 11 ஆம் தரங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் இடையே பாடசாலை, வலயம், தேசிய மட்ட நிலைகளில் போட்டி நடைபெறும்.

பாடசாலை, வலயமட்டங்களில் முதல் மூன்று இடங்களைப் பெறும் கட்டுரைகள் தேசிய மட்டப்போட்டிகளுக்கு எடுத்துக் கொள்ளப்படும், தேசிய மட்டத்தில் மேலும் பத்துக் கட்டுரைகளும் தேர்ந்தெடுக்கப்பட்டு, பரிசுகளும், பாராட்டுப் பத்திரங்களும் வழங்கப்பட உள்ளன.

தேசிய மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று இடங்களுக்கு பெறுமதி மிக்க பரிசுகளுடன் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மேலும் பத்துக் கட்டுரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும், (க-152)

# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28 - 08 - 1923

மறைவு 12 - 10 - 1994

## பிரம்மஸ்ரீ ஏகாம்பரநாதேஸ்வரக்குருக்கள் சோமசுந்தரஐயர்

(இளைப்பாறிய ஆசிரிய பண்டிதர்)

திதி: அட்டமி 24-09-2001

ஏழு ஆண்டுகள் கடந்தும் ஏங்கியேநாம் தவிக்கின்றோம்!
ஆத்[illegible] சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

சிவன் கோயிலடி,
சித்தன்கேணி.

மனைவி, மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(92608)

## 1,500 இராணுவத்தினர், பொலீஸாருடன் வந்த

# கப்பல் மீதான புலிகளின் தாக்குதல் காலை தொடங்கி மாலையே முடிந்தது

## மரணவிசாரணையில் 'டோறா' அதிகாரி சாட்சியம்

வலி. வடக்கு, செப்.24

ஆயிரத்து 500 இராணுவத்தினர் மற்றும் எண்பது பொலீஸார் உட்பட மற்றும் படையினருக்கு உதவும் பணியாளர்களான சிவிலியன்களையும் ஏற்றி வந்த கப்பலே கடந்த 16ஆம் திகதி பருத்தித்துறைத் துறைமுகத்துக்கு அண்மையாக விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகியது.

அதைத்தொடர்ந்து எம்மை குறிப்பிட்ட இடத்திற்கு விரைந்து செல்லுமாறு அவசர கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அங்கு காலை ஆரம்பித்திருந்த சமர் மாலை வரை நீடித்தது.

மேற்கண்டவாறு இலங்கை கடற்படைக்குச் சொந்தமான 'பி'483 ஆவது டோறாப்படகின் சிரேஷ்ட கடற்படை உத்தியோகத்தரான ரத்நாயக்க முதியான்சலாகே குறிப்பிட்டார்.

கடந்த 16 ஆம் திகதி பருத்தித்துறை கடற்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் இராணுவத்தினரை ஏற்றி வந்த கப்பலுக்கு பாதுகாப்பு வழங்கிக் கொண்டு வந்த கடற்படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது மரணம் அடைந்த 11 பேரின் மரண விசாரணை மல்லாகம் மாவட்ட நீதிபதி பா. சுப்பிரமணியம் முன்னிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது

அங்கு தொடர்ந்து சாட்சியமளித்த கடற்படை சிரேஷ்ட அலுவலரான ரத்நாயக்க கூறியதாவது:-

பருத்தித்துறைத் துறைமுகத்துக்கு அண்மையாக உள்ள கடற்பரப்பில் புலிகள், இராணுவத்தினர் வந்த கப்பலைத் தாக்குவதாகக் கூறி வந்து 16 ஆம் திகதி அதிகாலை 5.45 மணியளவில் என்னை நித்திரையில் இருந்து எழுப்பினார்கள்.

### எமது படகை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம்

நாம் துறைமுகத்தில் நித்திரை கொண்டமையால் உடனடியாக ஏனைய உத்தியோகத்தர்களையும் உஷார்ப்படுத்தி எமது டோறாப்படகுக்கு உரிய 15 பேருடன் சென்று சமர் இடம்பெறற இடத்திற்குச் செல்ல ஆயத்தமானோம்.

காங்கேசன்துறைத் துறைமுகத்தில் இருந்து சுமார் 35 கடல்மைல் பரப்புக்குச் சென்றோம். அப்போது எமது படகை நோக்கி மூன்று வேறு படகுகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டபடி வந்தன.

நாங்களும் திருப்பிச் சுட்டோம். அப்போது எம்மை நோக்கி வந்த படகுகள் விடுதலைப் புலிகளுடையவை என்பதைக் கண்டுகொண்டோம். நாம் தாக்குதல் மேற்கொண்டிருக்கும் போது எமக்கு வானொலி மூலம் இராணுவத்தினர் வந்து கொண்டிருக்கும் கப்பலுக்கு அருகில் செல்லும்படி கட்டளை கிடைக்கப்பெற்றது.

நாம் இராணுவத்தினர் வந்த கப்பலுக்கு சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் செல்லும் போது அக்கப்பலின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்துவதைக் கண்டேன். அத்துடன் அக்கப்பலுக்கு பாதுகாப்பு அளித்துக்கொண்டிருக்கும் டோறாப் படகுகளும் தாக்குதலுக்கு இலக்காகிக் கொண்டிருந்தன.

### சுமார் ஒரு மணி நேரம் தாக்குதலைத் தொடுத்தோம்

அப்போது இராணுவக் கப்பல் மற்றும் டோறாப் படகுகளுக்கு உதவும் முகமாக நாங்களும்தாக்குதலைத்தொடர்ந்தோம் அப்போது பெரிய கப்பல் மேற்புறத்தை நோக்கிச் சென்று கொண்டு இருந்தது. நாம் சுமார் ஒரு மணித்தியாலம் வரை தாக்குதலைத் தொடர்ந்தோம்.

தாக்குதல் இடம்பெற்றுக் கொண்டிருந்த போதே எமது டோறாப் படகில் இருந்த ஒருவர் காயப்பட்டு மரணம் அடைந்தார். எனக்கும் வலது துடையில் காயம் ஏற்பட்டது. இக்காயத்தில் தற்போதும் கூட சன்னம் இருக்கின்றது. (நீதிமன்றத்திற்கு அதனைக் காட்டுகின்றார்) அதனை சத்திரசிகிச்சை மூலமே அகற்ற முடியும்.

எமது டோறாப் படகில் இருந்த ரி டபிள்யூ. ஏ. அமரசிங்க என்பவரே தாக்குதலில் பலியானார். அவரின் இலக்கம் 18971 ஆகும். அவரின் தலைக்கவசத்தை துளைத்துக் கொண்டு சென்ற துப்பாக்கிக்குண்டு ஒன்றினாலேயே மரணம் சம்பவித்தது.

அவர் அணிந்திருந்த தலைக்கவசம் பிளாஸ்ரிக் அல்ல. ஆனால் பிளாஸ்ரிக் போன்ற வேறு ஒரு பொருளினால் அது தயாரிக்கப்பட்டு இருந்தது. அவரின் காயத்தை நான் நேரில் பார்வையிட்டேன். அவரின் காயம் துப்பாக்கியால் ஏற்பட்டது. அதனாலேயே அவரின் மரணம் ஏற்பட்டதாகக் கூறுகின்றேன்.

காயப்பட்டு வீழ்ந்து கிடந்த நிலையில் நான் டோறாப் படகின் பொறுப்பான அதிகாரிக்கு அபயசிங்க காயம் அடைந்துள்ளதாகவும், எனக்கும் காயம் ஏற்பட்டுள்ளதாகவும், எங்களை உரிய இடத்திற்குக் கொண்டு செல்லும் படியும் கூறினேன்.

### முதலுதவிச் சிகிச்சை

சற்று நேரத்தில் எமது டோறாப் படகு சண்டை நடைபெற்ற இடத்தில் இருந்து வேறு இடத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு அங்கு எமக்கு முதலுதவிச் சிகிச்சை அளிக்கப்பட்டது. எனது காயம் சிறிய காயமாக இருந்தமையால் அக் காயம் பற்றிப் பெரிதாக எடுத்துக் கொள்ளப்படவில்லை.

சண்டையின்போது இத்தகைய காயங்கள் ஏற்படுவது சகஜம் என்றபடியால் முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. முதலுதவியின் பின்னர் எமது டோறாப்படகு சிகிச்சையளிக்கப்பட்ட அமரசிங்காவுடன் காங்கேசன் துறைத் துறைமுகத்தை நோக்கிச் சென்றது. அங்கு நாம் அமரசிங்காவைக் காங்கேசன்துறைத் துறைமுகத்தில் தரித்து நின்ற கடற்படை வைத்திய அதிகாரியிடம் கையளித்தோம்.

பின்னர் நான் காயத்திற்கு மருந்து கட்டுவதற்கு இராணுவ ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். அங்கு அமரசிங்க மரணம் அடைந்ததாக அறிந்தேன். எனது காயத்திற்குச் சிகிச்சை பெற்றுக்கொண்டு டோறாப்படகுக்கு வேண்டிய எரிபொருள், தண்ணீர் மற்றும் வெடிபொருள்களையும் நிரப்பிக்கொண்டு மீண்டும் தாக்குதல் இடம்பெற்ற இடத்தை நோக்கிச் சென்றோம்.

அப்போது நேரம் 12 மணி முதல் 12. 30 வரை இருக்கலாம். நாம் சென்றுகொண்டிருக்கும்போதுஒரு டோறாப் படகு வேறு ஒரு டோறாப் படகைக் கட்டி இழுத்து வருவதை அவதானித்தேன்.

(9 ஆம் பக்கம் பார்க்க)

# காரைநகரில் சனசமூக நிலைய நன்கொடை

ஊர்காவற்றுறை, செப். 24

ஊர்காவற்றுறைப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்கு 2001 ஆம் ஆண்டுக்கான நன்கொடைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கமைய பிரதேச சபை உப அலுவலகங்கள் ரீதியாக சனசமூக நிலையங்களின் செயற்பாடுகள்குறித்து ஆராயப்படுகின்றது.

இதேவேளை —

காரைநகர் வடக்கு, தெற்கு உப அலுவலகங்களுக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர்கள் தத்தமது நிலையங்களின் கூட்ட அறிக்கைப் பதிவேடுகள், கணக்கறிக்கைகள், வங்கிப் புத்தகங்கள் என்பவற்றுடன் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு காரைநகர் வடக்கு உப அலுவலகத்திற்குச் சமுகமளிக்குமாறு ஊர்காவற்றுறைப் பிர[illegible] அறிவித்துள்ளார்.

( க - 16 )

# எழுவைதீவுப் பிரதேச மக்கள் குடிதண்ணீரின்றிப் பெரும் அவதி

ஊர்காவற்றுறை, செப், 24

தற்பொழுது நிலவும் கடும் வரட்சி காரணமாக எழுவைதீவுப் பிரதேசத்தில் பெரும்பாலான நீர் நிலைகள் வற்றியுள்ளதால் குடிதண்ணீரைப் பெறுவதில் இப்பகுதி மக்கள் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

நன்னீர் பெறும் ஒரு சில கிணறுகளிலும் நீர் அள்ளியவுடன் மீண்டும் ஊற்றெடுக்கும் வரை காத்திருக்க வேண்டியுள்ளதாக இப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

ஒரு சிலர் கடற்கரை ஓரமாகச் சிறு குன்றுகளை அமைத்து பாறைகளில் நின்று வடிந்து வரும் நீரை எடுத்து வடிகட்டிப் பாவித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இப்பிரதேசத்தில் தொற்று நோய்கள் பரவும் ஆபத்து நேர்ந்துள்ளது.

இங்கு கால்நடைகள் தண்ணீர் இன்றி கடல் நீரையே பருகுவதுடன் மதிய வேளைகளில் பெருமளவு கால்நடைகள் வெப்பத்தை தணிப்பதற்காகக் கடலுக்குள் இறங்கி நிற்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

கடந்த வருடம் எழுவைதீவுக்கு யு. என். எச். சி. ஆர் நிறுவனத்தினர் ஊர்காவற்றுறையில் இருந்து படகு மூலம் குடிதண்ணீர் விநியோகத்தைச் செய்திருந்தனர்.

ஆனால் தற்போது ஊர்காவற்றுறையிலும் மோசமான குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிலவுவதால் இத்திட்டமும் செயற்படுத்த முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேசத்தில் 163 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 670 பேர் வசித்து வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

(க-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஐ.தே.கட்சியின் அஸ்திரம் !

ஏழு நீண்ட ஆண்டுகள் எதிர்த் தரப்பு வரிசையில் இருந்துவிட்ட ஐக்கிய தேசியக் கட்சிக்கு எப்படியும் ஆட்சியைப் பிடித்து விடவேண்டும் என்பதில் அவசரமோ அவசரம்.

உரிய பெரும்பான்மையின்றி நூலிழையில் ஆடிக்கொண்டிருக்கும் பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசைக் கவிழ்த்தால் ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றலாம் என்ற நப்பாசை அதற்கு.

என்றாலும் தற்போதைய நாடாளுமன்றத்தில் கட்சிகளின் நிலை பற்றிய அட்சரகணிதப்படி, தமது கட்சி தனித்து ஆட்சி அமைப்பது இயலாத காரியம் என்பதும் ஐ.தே.கவின் தலைமைக்கு நன்கு தெரியும்.

அப்படி ஆட்சி அமைப்பதாயினும் ஒன்றுக்கொன்று எதிரும் புதிருமாக நிற்கும் உதிரிக்கட்சிகளை ஓரணியில் நிறுத்தி, அவற்றின் ஆதரவுடன்தான் அரசமைக்க வேண்டியிருக்கும்.

ஒவ்வொரு பக்கத்தில் பிய்த்துக் கொண்டு போக முயற்சிக்கும் கட்சிகளைக் கட்டி அரவணைத்து ஓர் ஆட்சியைத் தொடர்வது என்பது சாத்தியப்படாத வேலை.

எனவே, தற்போதுள்ள சாதகமான அரசியல் சூழலில் ஒரு பொதுத் தேர்தலை எதிர்கொண்டு, அதன் மூலம் பெரும்பான்மை பெற்று, ஆட்சியைப் பிடிக்கலாம் என்று மனக் கணக்குப் போடுகிறது ஐ.தே.கட்சி.

உடனடியாக ஒரு பொதுத் தேர்தலுக்கு வழிசெய்வதானால், தற்போதைய பொ.ஐ.முன்னணி அரசைக் கவிழ்த்தால்தான் அது சாத்தியமாகும்.

அதற்காகத்தான் நம்பிக்கையில்லாப் பிரேரணை என்ற ஆயுதத்தை மீண்டும் தூக்கியிருக்கின்றது ஐ.தே.க.

பொ.ஐ.முன்னணி அரசுக்கு வழங்கி வந்த ஆதரவை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வாபஸ் பெற்று, பொ.ஐ.மு. அரசு பெரும்பான்மைப் பலத்தை இழந்த சமயத்தில் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து, அவசர அவசரமாக அதை நிறைவேற்ற வேண்டும் என்பதில் விடாப்பிடியாக நின்ற ஐ.தே.க., பின்னர் அரசுக்கு ஜே.வி.பி. ஆதரவு வழங்க முன்வந்ததும் நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான தனது திட்டத்திலிருந்து பின்வாங்கியது. இப்போது மீண்டும் அந்த அஸ்திரத்தைக் கையில் எடுக்கத் தயாராகின்றது ஐ.தே.க.

இது விடயத்தில் ஐ.தே.க. ஆரம்பத்தில் முழுமூச்சாக நின்று, பின்னர் பின்வாங்கி, இப்போது திரும்பவும் உஷாராவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

முதலாவது - இப்பிரேரணைக்கு கிடைக்கக் கூடிய எம்.பிக்களின் ஆதரவு பற்றிய சந்தேகம் ஐ.தே.கவுக்கு இருந்தமை.

ஆரம்பத்தில் பிரேரணை வெல்லும் என்று நம்பிய ஐ.தே.க., பின்னர் ஜே.வி.பி. குத்துக்கரணம் அடித்து அரசுக்கு ஆதரவளிக்க முன்வந்ததும் அந்த நம்பிக்கையை இழந்தது.

ஆனால் இப்போது, அமைச்சர்கள், பிரதியமைச்சர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதால் அதிருப்தியுற்றிருக்கும் அரசுத் தரப்பினரையும் வளைத்துப் போட்டு பிரேரணையை வெற்றி பெறச் செய்யலாம் என்ற நம்பிக்கை மீண்டும் ஐ.தே.கட்சிக்குப் பிறந்துள்ளது.

மற்றையது - இந்த அரசு கவிழ்ந்தாலும், இந்த அரசு காபந்து அரசாகத் தொடர, புதிய பொதுத் தேர்தலுக்கு ஜனாதிபதி அறிவிப்பு விடுப்பாரே தவிர, ஐ.தே.க. மாற்று அரசு அமைக்க அனுமதிக்கமாட்டார் என்பது ஐ.தே.கட்சிக்கு புரிந்துள்ளமை.

எப்படியும் தேர்தல் வரப்போகின்றது. அந்தத் தேர்தலும் அது தொடர்பான பொலீஸ் நடவடிக்கைகளும் சுயாதீன ஆணைக்குழுக்களின் கட்டுப்பாட்டில் இருக்க அத்தேர்தல் நடந்தால் அது நியாயமானதாகவும், பக்கச் சார்பற்றதாகவும் இருக்கும் என்று ஐ.தே.க. கருதுகின்றது.

எனவே தேர்தலுக்கு முன்னர் இந்த ஆணைக்குழுக்களை அமைக்க வாய்ப்பு இருந்தால் அதற்கு அனுமதிப்பதே சிறந்தது என்று ஐ.தே.க. கருதியது.

இந்த ஆணைக்குழுக்களை அமைக்க வகை செய்யும் அரசமைப்புத் திருத்தம் அனேகமாக இன்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்த நடவடிக்கை பூர்த்தியானதும் ஐ.தே.கட்சி தனது பழைய பல்லவியை - நம்பிக்கையில்லாப் பிரேரணை என்ற பல்லவியை - மீண்டும் பாடத் தொடங்கி விடும் என்று எதிர்பார்க்கலாம்.

# பஸ்ஸில் பயணிகளுடன் கைதிகளையும் அழைத்துச் செல்வதால் அசௌகரியம்

யாழ்ப்பாணம்,செப்.24

போக்குவரத்துச் சபை பஸ்களில் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் கைதிகளை அழைத்துச் செல்வதால் பொதுமக்கள் பெரும் அசௌகரியத்தை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை காலை யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்குச் சென்ற பஸ்ஸில் சன நெரிசலுக்கு மத்தியில் சோடி சோடியாகப் பிணைக்கப்பட்ட நிலையில் கைதிகளும் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

கை விலங்கிடப்பட்ட நிலையில் நின்றவாறு பயணித்த கைதிகள் பஸ்ஸினுள் ஏற்பட்ட சமநிலைத் தளம்பலினால் ஏனைய பயணிகள் மீது விழுந்து பெரும் சிரமங்களை ஏற்படுத்தினர். அத்துடன் சம்பந்தப்பட்ட கைதிகளும் பெரும் சிரமங்களுடன் அவஸ்தைப்பட்டதையும் அவதானிக்க முடிந்தது.

விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட இவர்கள் மாலை மீண்டும் பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு அதேபோன்றே பஸ்ஸில் அழைத்துவரப்பட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைதிகளை இவ்வாறு சிரமப்படுத்துவது மனிதாபிமானமற்ற செயல் என்று தெரிவித்த பயணிகள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் வெகுவாகக் கண்டித்தனர். (க-9-ரி)

## எழுவைதீவில் அபிவிருத்திக் குழு

எழுவைதீவு பிரதேசத்தில் பொது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கென அப்பகுதி மக்கள் ஒன்றிணைந்து பொது அபிவிருத்திக்குழு என்ற அமைப்பை அங்குரார்ப்பணம் செய்துள்ளனர். (க-16)

## நாட்டு நடப்பு

ஆச்சிக்கு பாக்கிடித்து தந்து
அருகினில் இருந்து கொண்டு
'ஆச்சி உன் சாமத்திய வீட்டை
எப்படிச் செய்தார்?' என்றேன்.
'போச்சடா! வெட்கக் கேடு!
பெண்டுகளுக்குச் சொல்லிடாதே
மூச்சுப் பேச்சின்றி யெல்லோ
முடிப்பினம் காரியத்தை
நாச்சனும் பொன்னுவுமாய்
நாலு பால் றொட்டி சுட்டு
காச்சிய களி புக்கையோடு
காரியம் முடிஞ்சு போச்சு' - என்றாள்.

*- விகடகவி.*

### ஆங்கில வைத்தியம் வேரூன்ற முன்னர்

# சித்த ஆயுர்வேத சிகிச்சையையே நம் முன்னோர் நம்பியிருந்தனர்

## முன்னாள் பேராசிரியர் பேச்சு

யாழ்ப்பாணம்,செப்.24

ஆங்கில வைத்தியம் வேரூன்ற முன்னர் நமது முன்னோர்கள் சித்த ஆயுர்வேத சிகிச்சையைத்தான் நம்பியிருந்தனர். அது மட்டுமன்றி அன்றைய காலப்பகுதியில் வசித்த உள்ளூர் வைத்தியர்கள் பலரும் கால நேரம் கருதாமல்-இரவு, பகல் பாராது நோயாளிகளுக்கு அரவணைப்புடன் கூடிய சிறந்த சிகிச்சைகளையும் வழங்கியிருந்தனர்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக் கழகத்தின் முன்னாள் பேராசிரியர் வி.சிவசாமி.

யாழ்.மாவட்ட சித்த ஆயுர்வேத வைத்திய அபிவிருத்திச் சபையின் அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஆங்கில வைத்தியர்களால் கைவிடப்பட்ட நோயாளர்கள் பலர் சித்த ஆயுர்வேத சிகிச்சை அளிக்கப்பட்டு உயிர்தப்பிய வரலாறுகளும் உள்ளன.

### உயிர்தான் பிரதானம் என்றே கருதினர்

ஆயுர்வேத வைத்தியர்கள் அன்றைய காலத்தில் ஆற்றிய சேவைகளை எமது சமூகம் என்றுமே மறந்துவிடாது. பணம்தான் பிரதானம் என்று அன்றைய சித்த வைத்தியர்கள் எதிர்பார்க்கவில்லை. அதற்கு மாறாக உயிர்தான் பிரதானம் என்றுதான் அவர்கள் கருதிச் செயற்பட்டனர்.

நமது முன்னோர்கள் தமது அனுபவ மூலமாகக் கண்டு உணர்ந்து கடைப்பிடித்த சித்த ஆயுர்வேத மருத்துவம் சிதைவுறாத அதேவேளை, அதற்குப் புதுமெருகூட்டிப் புதிய நோய்களுக்கும் சிறந்த சிகிச்சை அளிக்க வழிசமைக்க யாழ்.மாவட்ட சித்த ஆயுர்வேத வைத்திய அபிவிருத்திச் சபை பாடுபடவேண்டும்- என்றார்.

### தலைமையுரை

இக்கூட்டத்துக்குத் தலைமை வகித்து உரையாற்றிய வைத்திய கலாநிதி த.சிவானந்தன் தமது உரையில்:-

பக்கவிளைவுகள் இல்லாத ஔஷதங்களைச் சித்த ஆயுர்வேத வைத்தியத்தின் மூலமே மக்கள் பெறமுடியும். இன்று இந்திய உபகண்டத்திலே ஆங்கில வைத்தியத்துறைக்கும் மேலான உயர்ந்த தரத்தில் சித்த ஆயுர்வேத மருத்துவம் மதிக்கப்பட்டு வருவது நாம் அனைவரும் அறிந்ததே.

எமது நாட்டிலும், குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்திலும் இத்தகைய சிறப்பான சிகிச்சையை அளிக்கின்ற வைத்தியர்களும், வைத தியசாலைகளும் தழைத்தோங்க வேண்டும்.

எமது மக்கள் நோய் நீங்கி சுக வாழ்வு பெறவேண்டும். அதற்குப் பக்கபலமாக நாம் விளங்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு தான் யாழ்ப்பாண மாவட்ட சித்த ஆயுர்வேத வைத்திய அபிவிருத்திச் சபையை இன்று ஆரம்பித்து வைக்கின்றோம் - என்றார்.

ஓய்வூதியரும், பாவாணருமான தா.தேவமதுரம் தனது உரையில்:-

அன்றாட வாழ்க்கையில் அவலப்படும் மக்களுக்கு இலவச சிகிச்சை அளிக்கவும், உயிருடன் போராடும் நோயாளிக்கு எந்தவகையிலும் உதவவும், இச்சபை பல்வேறு திட்டங்களை வகுத்துள்ளமை பாராட்டுதற்குரியதாகும். சிறிய தலைவலி கண்டாலே விசேட வைத்திய நிபுணரைத் தேடுகின்ற மாயை மறைய வேண்டும். நமது பாரம்பரிய மருத்துவரிடையே காணப்படும் தேவையற்ற முரண்பாடுகள் யாவும் முற்றாக நீங்க வேண்டும்.

பொது நோக்கோடு முன்னெடுக்கப்படும் இச்சபையின் முயற்சிகளுக்கு வைத்தியர்கள் மட்டுமல்ல பொதுமக்கள் அனைவரும் ஆதரவு காட்டவேண்டும்.

ஏடுகளிலும், மருத்துவர்களின் உள்ளத்திலும் இலங்கிடும் எமது உள்நாட்டு மருத்துவக்கலையை மூடி மறைக்காமல் அடுத்த சந்ததிக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும். அதற்காக இச்சபை பாடுபட வேண்டும் - என்றார்.

இந்தக் கூட்டத்தில் வைத்திய கலாநிதி ந.சத்தியமூர்த்தி, வைத்திய கலாநிதி ந.சிவபாலன், விஷக்கடி வைத்தியர் இ.சற்குருநாதன் ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினர். (க-7)

## வயோதிபர் சுற்றுலா

யாழ்ப்பாணம்,செப்.24

யாழ்.வை.எம்.சி.ஏ நடத்திவரும் வயோதிபர் பகல் பராமரிப்பு நிலையத்தில் பராமரிக்கப்பட்டுவரும் வயோதிபர்களுக்கான சுற்றுலா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வயோதிபர் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இச்சுற்றுலா இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க-ரி)

## நாளை

புரட்டாதி 09
செவ்வாய்க்கிழமை
திதி: அட்டமி
முற்பகல் 7.55 வரை.
நட்சத்திரம் : மூலம்
காலை 7.02 வரை
அட்டமி - நவமி நாள்
சுபநேரம்: 10.32 - 12.02
ராகுகாலம் : 3.02 - 4.32
(பழைய நேரப்படி)

## ஓய்வு பெற்றார்

வலிகாமம் தெற்கு,செப்.24

தெல்லிப்பழை கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய வீ.ஆ.கணேசலிங்கம் தமது சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

வலிகாமம் கல்வி வலய கல்வி அபிவிருத்திப் பிரிவுக்கு பொறுப்பாகக் கடமையாற்றிய உதவிக் கல்விப் பணிப்பாளர் கா.சந்திரபாலன் தெல்லிப்பழை கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். (க-152)

## உதயவாக்கு

மூடிய வாய் சண்டையை விட்டு விலகிவிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவப்புலவர் பட்டப் பரீட்சை வழிகாட்டல் வகுப்பு

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம், சைவப் புலவர், இளஞ் சைவப்புலவர் ஆகிய பட்டப் பரீட்சைகளுக்கான வழிகாட்டல் வகுப்புக்களை நடத்தவுள்ளது.

இந்த வழிகாட்டல் வகுப்புக்களின் ஆரம்ப வைபவம் எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என்றும் -

சம்பந்தப்பட்ட பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்கென ஏற்கனவே விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்களும, புதிதாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க விரும்புவோரும் இந்த வழிகாட்டல் வகுப்புக்களில் கலந்து கொள்ள முடியும் என்றும் -

சைவப்புலவர் சங்கத்தின் பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார்.

யாழ்குடாநாட்டைச் சேர்ந்த மூத்த சைவப் புலவர்கள், சித்தாந்த பண்டிதர்கள், பண்டிதர்கள், வழிகாட்டல் வகுப்புக்களை நடத்துவர் என்றும்-

ஒவ்வொரு வாரமும் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் இந்த வகுப்புக்கள் நடத்தப்படும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (க-7)

### படகில் தடுத்து வைக்கப்பட்டிருந்த

# இலங்கையர் 68 பேருக்கும் ஆஸியில் தரையிறங்க அனுமதி

சிட்னி.செப்.24

ஆஸ்திரேலியாவின் கொக்கோஸ் தீவில் கடந்த ஒரு வாரமாகப் பழுதடைந்த படகு ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் எனக் கூறப்படும் 68 இலங்கையரும் கடந்த வெள்ளிக்கிழமை ஆஸ்திரேலியாவில் தரையிறங்க அனுமதிக்கப்பட்டனர்.

ஆஸ்திரேலியாவுக்கு மிகத் தொலைவில் உள்ள ஏரி ஒன்றில் நிறுத்தப்பட்டிருந்த இந்தப் பழைய படகினுள் நீர் கசியத் தொடங்கவே நிலைமை மோசமடையத் தொடங்கியதாகவும் -

இதையடுத்தே, 68 பேரும் ஆஸ்திரேலியாவினுள் தரையிறங்க அனுமதிக்கப்பட்டனர் என்றும் - தகவல்கள் தெரிவித்தன.

ஆஸ்திரேலியாவில் தற்போது நடைமுறையில் உள்ள எல்லைப் பாதுகாப்புச் சட்டத்தின் பிரகாரம் மேற்படி 68 பேரும் அகதிகள் என்பது நிரூபிக்கப்பட்டால், அவர்களுக்கு நிரந்தர வதிவிட விசா வழங்கப்படாமல் தற்காலிக வதிவிட விசாவே வழங்கப்படும் என்றும் -

பின்னர் அவர்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவர் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (க-7)

கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!

முத்தாக மூன்று மாங்காய்
காணிக்கை கிடக்குதெண்டு
முகுந்தனும் அங்கே போனான்.
கிட்டவாய் கிடக்குதெண்டு
மூன்றடி வைக்கு முன்னே
மிதிவெடி கிடந்து வெடிக்க
முன்னங்கால் சிதறிப்போய்
நினைவிழந்து வீழ்ந்தான்!



# அமெரிக்கா தொடுத்திருக்கும் புதிய போர்:

# அப்பாவி மக்களின் உயிர்களை அதிக அளவில் காவு கொள்ளுமா?

**அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின் போது, பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவங்களுக்குப் பழிதீர்க்கும் நோக்கில் அமெரிக்கா பதில் நடவடிக்கை எடுக்குமேயானால் பல்லாயிரக் கணக்கான அப்பாவி மக்களின் உயிர்கள் காவு கொள்ளப்படுவதைத் தவிர்க்கவே முடியாது என்கிறார் கட்டுரையாளர் அனுரா சொலமன்ஸ். 'திவயின' வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

அமெரிக்கரான மாக் பென்ஹமின் தாயாருக்குக் கடந்த 11 ஆம் திகதி, அமெரிக்க நேரத்தின்படி காலை 8.30 மணியளவில் தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது. சிறிது நேரத்திற்கு முன்னர் அமெரிக்காவிலுள்ள பொஸ்டன் விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட விமானத்திலிருந்து மாக் பென்ஹம் தனது தாயாருடன் தொடர்பு கொண்ட அழைப்பே அதுவாகும். விமானத்தில் பறந்து கொண்டே மகன் தன்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டது தாய்க்கு சந்தோஷமாக இருந்தது. மகன் வீட்டுக்குத்தான் வந்து கொண்டிருந்தார். இருப்பினும் அதற்குள் தொடர்பு கொண்டது அம்மாவுக்கு மிகவும் திருப்தி.

இருந்த போதிலும் மாக் தொடர்ந்து பேசவில்லை.

"அம்மா இதை மாத்திரம் ஞாபகத்தில் வைத்திருங்கள். நான் அம்மாவிடம் பேரன்பு வைத்திருக்கிறேன்" இவ்வளவே அவரால் கூற முடிந்தது.

மகன் இவ்வாறு கூறி முடிந்ததும் இடியொலி போன்ற பாரிய சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டது. மாக் தனது தாயுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டிருந்தபோது, தனது வாழ்வு ஒரு சில விநாடிகளில் முடிவடையப் போவதை அவரால் உணரமுடிந்தது. பொஸ்டன் விமான நிலையத்தில் இருந்து சிறிது நேரத்துக்குள் விமானத்தைக் கடத்திய கடத்தல்காரர்கள் தங்கள் குழுவிலிருந்த தற்கொலை விமானியைப் பயன்படுத்தி, அந்த விமானத்தை வாஷிங்ரனில் உள்ள அமெரிக்கப் பாதுகாப்புத் தலைமையகமான பென்டகனை நோக்கிக் கொண்டு சென்றனர். விமானத்தைக் கட்டடத்தின் மீது மோதி, விமானத்தையும் கட்டடத்தையும் அழிப்பதே கடத்தல்காரரின் திட்டமாகும். திட்டமிட்டவாறே திட்டம் நிறைவேறியது.

மாக் பென்ஹம் அவரது தாயாருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டிருந்தபோது விமானம் பென்டகன் கட்டடத்தை நோக்கி ஒரு மைல் தூரத்தில் வந்துகொண்டிருந்தது. மாக் பென்ஹம் தாயாருடன் ஒரு சில சொற்களைப் பேசி முடிப்பதற்குள் விமானம் கட்டடத்தின் மீது மோதிவிட்டது. அதுவே தாயாருக்குக் கேட்ட பாரிய சத்தமாகும். மாக் பென்ஹமின் உடல் இன்னும் கிடைக்கவில்லை. ஒருவேளை அது ஒருபோதும் கிடைக்காமலும் விடக்கூடும்.

உலகிலுள்ள கட்டடங்களில் உயரத்தில் இரண்டாவது இடத்தை வகித்த நியூயோர்க் நகரில் அமைந்த உலக வர்த்தக மையக் கட்டடத்தின் மீதும், வாஷிங்ரன் நகரில் அமைந்துள்ள அமெரிக்கப் பாதுகாப்புத் தலைமையகமான பென்டகன் கட்டடத்தின் மீதும் கடந்த 11ஆம் திகதி பயங்கரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலானது உலகில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட இத்தகைய தாக்குதல்களில் மிகவும் பாரியனவாகும்.

உலக வர்த்தகமையமானது 1973ஆம் ஆண்டில் 750 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் கட்டப்பட்டது. இன்று அந்தக் கட்டடத்தை நிர்மாணிப்பதானால் 6ஆயிரம் மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும். அத்தகைய கட்டடமும் அந்தக் கட்டத்தில் இருந்த 50ஆயிரத்துக்கு மேற்பட்டோரின் உயிர்களும் அமெரிக்கப் பாதுகாப்புத் தலைமையகக் கட்டடத்தின் ஒரு பகுதியும் அங்கு பணியாற்றிய ஆயிரத்துக்கும் அதிகமானோரும், 4 விமானங்களும் அந்த விமானங்களில் பயணம் செய்துகொண்டிருந்த 270 பேரின் உயிர்களும் இந்தத் தாக்குதல்கள் காரணமாக அழிக்கப்பட்டன. உலகில் மிகவும் சக்திவாய்ந்த அரசு என எண்ணிக்கொண்டிருந்த அமெரிக்காவுக்கு இத்தகைய அழிவு எவ்வாறு ஏற்பட்டது என்பதைக் கற்பனை செய்து பார்ப்பதே கடினமாகும். 110 மாடிகளைக் கொண்ட உலகவர்த்தக மையமானது 150 அடி உயரத்திற்கு இடியுண்ட கற்குவியலாகக் காணப்பட்டது.

### முந்திய தாக்குதல்

அமெரிக்காவுக்கு எதிராகச் சர்வதேச பயங்கரவாதம் செயற்பட ஆரம்பித்தது 1983ஆம் ஆண்டிலாகும். 1983இல் லெபனானில் உள்ள பெய்ரூட் நகரில் அமைந்திருந்த அமெரிக்கத் தூதரகத்தின் மீது குண்டுகளுடன் காரில் சென்ற முஸ்லிம் கொரில்லா மோதிய சம்பவத்தில் 67 பேர் கொல்லப்பட்டனர். அதே வருடம் ஒக்ரோபர் மாதம் லெபனானிலுள்ள அமெரிக்கக் கடற்படை முகாமுக்குள் குண்டுடன் சென்ற லொறி மோதியதால் 241 அமெரிக்கக் கடற்படை வீரர்கள் கொல்லப்பட்டனர். 1984இல் பொகோடா நாட்டில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் மீது குண்டுவீசப்பட்டது. 1985இல் ஸ்பானியாவில் உள்ள அமெரிக்க விமானப் படை முகாமிலுள்ள மதுச்சாலை மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது 18 பேர் கொல்லப்பட்டனர். அதே ஆண்டு எல்சர்வடோரில் 13 அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர். ஜேர்மனியிலுள்ள பிராங்போட் நகரில் கார்க்குண்டுவெடிப்புச் சம்பவத்திலும் அமெரிக்கப் பிரயாணிகள் சென்று கொண்டிருந்த எகிப்து நாட்டு விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது 61 பேர் கொல்லப்பட்டனர். இந்த விமானம் முஸ்லிம் தீவிரவாதிகளால் மோல்டாவில் இருந்து கடத்தப்பட்டது. 1985இல் ரோம் மற்றும் வியன்னா விமானநிலையங்களில் ஒரேநேரத்தில் அரபுத் தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதல்கள் காரணமாக 20 அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர்.

1986இல் எதென்ஸ் விமான நிலையத்தில் நால்வரும் சில தினங்களின் பின்னர் பேர்லின் நகரில் உள்ள அமெரிக்கன் டிஸ்கோ மதுச்சாலையில் வெடித்த குண்டு காரணமாகப் பெரும் எண்ணிக்கையிலானோரும் காயமடைந்தனர். 1998இல் 'பான் அமெரிக்கன்' விமான சேவைக்குச் சொந்தமான 'போயிங் 747' ரக விமானத்தில் வைக்கப்பட்ட குண்டு வெடித்த காரணத்தால் ஸ்கொட்லாந்தில் உள்ள லொக்கர்பி நகரத்துக்கு மேலாக உயர் வானில் விமானம் பறந்துகொண்டிருந்தபோது 259 பேர் கொல்லப்பட்டனர். இதுவே உலகப் பிரசித்திபெற்ற லொக்கர்பி விமான விபத்து எனக் கூறப்படுகிறது.

1995இல் சவூதிஅரேபியாவில் உள்ள அமெரிக்க யுத்த நிலையத்தின் மீது முஸ்லிம் தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது 5பேரும் அதே ஆண்டு சவூதி அரேபியாவில் தஹ்ரான் நகரில் பெற்றோல் பவுஸரில் வைக்கப்பட்ட குண்டு வெடித்த சம்பவத்தில் ஏழு அமெரிக்கர்களும் கொல்லப்பட்டனர்.

1998இல் முஸ்லிம் தீவிரவாதிகள் லெபனான் நாட்டிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் மீது ரொக்கெற் தாக்குதலை மேற்கொண்டனர். 1998இல் கென்யா மற்றும் தன்சானிய நாடுகளிலுள்ள அமெரிக்கத் தூதரகங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின்போது 224பேரும் கொல்லப்பட்டனர். கடந்த வருடம் யேமன் நாட்டில் அமெரிக்கக் கப்பல் மீது முஸ்லிம் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலின்போது 17 அமெரிக்கக் கடற்படை வீரர்கள் கொல்லப்பட்டனர்.

இவற்றின்படி அமெரிக்காவுக்கு இஸ்லாமிய அடிப்படைத் தீவிரவாதிகளால் பெருமளவிலான அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகிறது. மத்திய கிழக்கில் பரவும் அமெரிக்க ஆதிபத்தியம் மற்றும் அமெரிக்கா அனுசரிக்கும் யுத்த ரீதியான கொள்கை என்பனவே இவற்றிற்கான முக்கிய காரணங்களாகும். மத்திய கிழக்கில் இஸ்லாமிய அடிப்படை வாதத் தீவிரவாதிகளால் பரம எதிரி எனக் கருதப்படும் இஸ்ரேலுக்கு அமெரிக்கா பெருமளவில் யுத்தரீதியான ஒத்துழைப்பை வழங்கி வருகிறது. இவற்றிற்குப் பழிவாங்கும் நோக்கில் ஹமாஸ் அமைப்பு ஆயுதங்களைக் கைகளில் ஏந்தியது. முஸ்லிம் சகோதரத்துவ அமைப்புகள் பல கடந்த காலங்களில் தலைதூக்கின.

### ஒஸாமா பின்லேடன்

இவற்றை விட அமெரிக்காவுக்கு புதிதாக இஸ்லாமிய அடிப்படைவாத எதிரி ஒருவர் 8 ஆண்டுகளுக்கு முன்னர் உருவாகினார். அவரே சூகலி ஒஸாமா பின்லேடன் அல்லது 'உஸாமா' என அழைக்கப்படுபவர் ஆவார். அவர் யு.பி.எல். எனவும் அழைக்கப்படுகிறார். இவருக்கு வயது 38. சவூதி அரேபியாவைச் சேர்ந்த 10 கோடீஸ்வரர்களில் இவரும் ஒருவர். இன்று உலகில் உள்ள 3ஆயிரம் பணக்காரர்களில் பின்லேடனும் ஒருவர். இவருக்கு வேறு ஆள்களின் பெயர்களில் உலகெங்கும் பெருமளவிலான சொத்துக்கள் உள்ளன. உலகிலுள்ள மிகப் பெரிய தோட்டச் சொந்தக்காரர்களில் இவரும் ஒருவர். தற்போது ஆப்கானில் மறைந்து வாழும் இவர், அந்த நாட்டின் மூன்றில் ஒரு பகுதியினருக்கு வாழ்வளிக்கின்றார் எனக் கூறப்படுகின்றது.

1990இன் பின்னர் அமெரிக்காவுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத நடவடிக்கைகள் பலவற்றிற்குப் பின்லேடனே நிதியுதவி வழங்கியுள்ளார். 1993இல் உலக வர்த்தக மையத்தின் மீது பின்லேடனின் சகாககளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இரட்டைக் கட்டடத்தில் ஒன்றைத் தரைமட்டமாக்குவதே அப்போது அவர்களின் திட்டமாக இருந்தது. கட்டடத்திற்குள் விஷ வாயுவைச் செலுத்தி கட்டடத்திற்குள் இருக்கும் அனைவரையும் கொல்வது எனவும் திட்டமிட்டிருந்தனர். இருப்பினும் இந்த இரு திட்டங்களில் ஒன்றேனும் நிறைவேறவில்லை. ஒரு கட்டடத்தின் கீழ் மாடியில் மாத்திரம் சிறிது சேதம் ஏற்பட்டது; ஒரு சிலர் கொல்லப்பட்டனர்.

★ ★ ★

பொஸ்டன் விமான நிலையத்தில் 4 விமானங்களில் ஏறிய விமானக் கடத்தற்காரர்களின் கைகளில் கடதாசி வெட்டும் கத்திகள் மாத்திரமே இருந்தன. இருப்பினும் அந்தச் சிறு ஆயுதம் விமானத்திற்குள் ஆற்றல் மிகு ஆயுதமாக விளங்கியது. 4 விமானங்களும் வானில் பறக்க ஆரம்பித்து சில நிமிடங்களின் பின்னர் கடத்தற்காரர்கள் சில பிரயாணிகளுக்கு அந்தக் கத்திகளால் காயமேற்படுத்தி, இரத்தத்தை ஓடவைத்து அதன் மூலம் ஏனைய பிரயாணிகளைக் கிலி கொள்ளச் செய்தனர். அதன் பின்னர் விமான ஓட்டியின் பகுதிக்குள் ஊடுருவிய கடத்தற்காரர்கள் விமானமோட்டிகளைக் கொன்றிருக்கலாம் என நம்பப்படுகிறது. அதனை அடுத்து கடத்தல் காரர்களுடன் இருந்த தற்கொலை விமானமோட்டிகள் விமானங்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர். கடத்தல் காரர்களில் கட்டாயமாக விமான மோட்டிகள் இருந்திருக்க வேண்டும். இல்லையேல் தேர்ச்சி பெற்ற விமானமோட்டிகளைத் தவிர எவராலும் குறித்த இலக்கை நோக்கி விமானங்களைச் செலுத்தமுடியாது. பணயக் கைதியாகக் கைது செய்யப்பட்ட விமானமோட்டி மீது கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டாலும் கூட, தற்கொலை இலக்கு மீது அவர் விமானத்தை மோதியிருக்க வாய்ப்பில்லை. அவ்வாறான சந்தர்ப்பங்களில் விமானமோட்டி கடத்தல் காரரின் இலக்கைவிடத் தான் விரும்பும் இலக்கையே தேர்ந்தெடுப்பார். அவ்வாறு விமானமோட்டி தேர்ந்தெடுக்கும் இலக்கானது பெரும்பாலும் குடிசனமற்ற பிரதேசமாகவோ அல்லது கடற்பரப்பாகவோ அமையும். இன்னும் சிறிது நேரத்தில் தான் மரணமடையக் கூடும் என்ற நிலையில் விமானமோட்டி தன்னைப் பணிப்பவர்களுக்கு ஒருபோதும் கீழ்ப்படியமாட்டார்.

இதன்படி தங்கள் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமாயின் விமானக் கடத்தல்காரர்களிடையே கட்டாயமாக தற்கொலை விமானமோட்டிகள் இருந்திருக்கவே வேண்டும்.

இருந்த போதிலும் கடத்தப்பட்ட நான்கு விமானங்களில் ஒன்று அனுபவமற்ற விமானியால் செலுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. கடத்தப்பட்ட விமானங்களில் ஒன்று பென்சில்வேனியாவில் வீழ்ந்து நொருங்கியதற்கு இதுவே காரணமாகும்.

★ ★ ★

உலக வர்த்தக மையக் கட்டடமானது உலகில் இரண்டாவது உயரமான கட்டடமாகும். இது 110 மாடிகளைக் கொண்டது. இந்தக் கட்டடத்தை விட உயரமான கட்டடம் மலேசியாவில் உள்ள 'பெற்ரோநாஸ் ரவர்' மட்டுமே ஆகும். 1973இல் நிர்மாணிக்கப்பட்ட உலகவர்த்தக மையத்தின் கீழ்த்தளத்தில் இருந்து 110 ஆவது மாடிக்கு மின் ஏணியில் செல்ல 22 விநாடிகள் எடுக்கும். இந்தக் கட்டடம் யப்பானியர் ஒருவரால் திட்டமிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டது. இந்தக் கட்டடமானது பெரியளவிலான பூமி அதிர்ச்சிக்குக் கூடத் தாக்குப்பிடிக்கக் கூடியதாகும். இந்தக் கட்டடத்தின் சட்டங்கள் தனியே உருக்கினால் ஆக்கப்பட்டுள்ளன. கடுமையான பூமியதிர்ச்சியின்போதுகூட அதிர்ச்சி காரணமாகச் சட்டகங்களில் பொருத்தப்பட்ட கண்ணாடிகள் கழரமாட்டா. இந்தக் கட்டடத்தை அமைத்த யப்பானியரின் தொழில்நுட்பத்திற்கு அமைய இந்தக் கட்டடம் ஒருபோதும் சரிந்து விழாது மேலும் ஏதாவது பயங்கரமான இயற்கை அனர்த்தம் ஏற்பட்டாலும் இதன்மாடிகள் ஒன்றுக்குப்பின் ஒன்றாக தானாகச் சிதைவடையுமே தவிர கட்டடம் ஒட்டுமொத்தமாக விழாது.

யப்பானிய வல்லுநர்களின் கூற்றுப்படி விமானம் மோதியதால் உருவான அதிர்ச்சி காரணமாக இந்தக் கட்டடம் இடியவில்லை. மாறாக விமானம் மோதிச் சிதறியதால் விமானத்திலிருந்த எரிபொருள் பரவி உருவான தீ காரணமாக ஏற்பட்ட அதி உஷ்ணம் காரணமாகவே கட்டடம் உடைந்து சிதறியுள்ளது. இந்த உஷ்ணத்தின் அளவு 1,500 பரனைஹைட் அளவைத் தாண்டியது. இதன்காரணமாக உருக்குச் சட்டகங்கள் உருகிவிட்டன. மேல் மாடிகள் உடைந்து கற்குவியல்களாக ஆகிய போது அவற்றின் பாரத்தைத் தாங்க முடியாமல் கட்டடம் உடைய ஆரம்பித்தது. அழிவுக்கு உள்ளான அமெரிக்கப் பாதுகாப்புத் தலைமையகம் அல்லது பென்டகன் கட்டடமானது உலகிலுள்ள பாரிய பணிமனைத் தொகுதியாகும். 29 ஏக்கர் நிலப் பரப்பை ஆக்கிரமித்துள்ள இந்தக் கட்டடம் ஐந்து கோணங்களைக் கொண்டதாகும். உலகிலுள்ள கட்டடங்களில் அதிக எண்ணிக்கையிலான கதவுகள், யன்னல்கள் இக்கட்டடத்திலேயே பொருத்தப்பட்டுள்ளன. இங்கு 10,000 வாகனங்களை நிறுத்தக்கூடிய வாகனத் தரிப்பிடம் உள்ளது.

பென்டகன் கட்டடம் 1941இல் நிர்மாணிக்கப்பட்டது. 23ஆயிரம் ஊழியர்கள் பணியாற்றும் இந்தக் கட்டடத்தில் உலகில் மிகப் பெரிய

**தமிழில்: கஜனி**

தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையம் அமைந்துள்ளது. இந்தக் கட்டடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்கம்பிகளின் நீளம் ஒரு லட்சத்து 60 ஆயிரம் கி.மீற்றராகும். அமெரிக்காவின் அனைத்துப் போர் நடவடிக்கைகளும் இந்தக் கட்டடத்தில் இருந்தே கட்டுப்படுத்தப்படுகின்றன.

பென்டகன் கட்டடத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலானது அமெரிக்காவின் போராற்றலைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. உலகில் எந்தவொரு நாட்டிலும் எந்தவொரு பிரச்சினையிலும் தலையிடும் அளவிற்கு ஆற்றல் பெற்றிருந்த அமெரிக்காவுக்கு இந்தத் திடீர்த் தாக்குதலானது பாரிய அளவில் உள ரீதியான பாதிப்பை உருவாக்கிய சம்பவமாக அமைந்து விட்டது.

தனது நாட்டிற்கு ஏற்படுத்திய அழிவுக்குப் பழிவாங்கும் நோக்கில் அமெரிக்க மத்திய கிழக்கில் உள்ள இஸ்லாமிய அடிப்படைத் தீவிரவாதக் குழுக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக்கூடும். ஆப்கான், லெபனானின் ஹமாஸ் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மற்றும் ஈராக் ஆகியன அமெரிக்காவின் அச்சுறுத்தல்களுக்கு ஆளாகலாம். அவ்வாறான தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுமேயானால் உலக வர்த்தக மையக் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி மரணமடைந்த அப்பாவி மனிதர்களைப் போல மேலும் பல மடங்கு அப்பாவி மனிதர்கள் கொல்லப்படுவதைத் தவிர்க்கவே முடியாது. ★



**யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விநியோகப் பிரிவுக்கென வாகனம் ஒன்று புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அது சங்கத் தலைவரினால் அண்மையில் சம்பிரதாயபூர்வமாக சேவைக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது.**

**வாகனத்திற்கு முன்பாக சங்கத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், உப தலைவர் பெஞ்சமின் ஜேக்கப் மற்றும் சங்க இயக்குநர்கள், பணியாளர்கள் ஆகியோர் காணப்படுகின்றனர். (ஜ-17)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியருக்கான சம்பளம்

மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை, மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஷ்ட வித்தியாசாலை, கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை ஆகிய மூன்று பாடசாலை ஆசிரியர்களும் இன்றும் நாளையும் மருதனார்மடம் கல்வி வலயத்தில் இயங்கும் தென்மராட்சிப் பிரிவில் தமக்குரிய சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்று சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் அறிவித்துள்ளனர். (க)


**யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம்**

## முக்கிய அறிவித்தல்

சகல அங்கத்தவர்களுக்குமான

சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்கு!

இடம்:- **பொது நூலகக் கேட்போர் கூடம்**

*பிரதேச சபை - உப அலுவலகம், கொக்குவில்.*

காலம்:- **நாளைமறுதினம் (26-09-2001) புதன்**

நேரம்:- **காலை 9 மணி (புதிய நேரம்)**

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடம், சமுதாய மருத்துவத்துறையினர் எமது அங்கத்தவர்களுக்குப் பிரத்தியேகமாக வழங்கும் மேற்படி நிகழ்வில் சகல அங்கத்தவர்களையும் தவறாது பங்குகொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சி.அ.சிவலிங்கம்,
*தலைவர்,*

அ.அல்பேட்,
*செயலாளர்.*

யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம்.

(92558)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

## நன்றி நவிலலும்

மலர்வு 26 - 09 - 1936



உதிர்வு 25 - 08 - 2001

## அமரர் சபாபதி திருநாவுக்கரசு

*பாசத்துடன் எமை வளர்த்து எம்*
*உயர்வுக்காக மாண்புடன் வாழ்ந்து*
*வானுறையும் தெய்வமாகிவிட்ட*
*உங்கள் நினைவு என்றும்*
*பசுமையாய் எம் நெஞ்சில்!*

உங்கள் ஆத்மா சாந்தி அடைவதாக!

எமது பாசமிகு தந்தையாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் கடித மூலமும் தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலமும் பத்திரிகை, துண்டுப்பிரசுரங்கள் மூலமும் மற்றும் மலரஞ்சலி செலுத்தி அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமக்குப் பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், இன்று (24.09.2001) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*'ஆயர்பாடி'*
*இல.1,நாமகள் ஒழுங்கை,*
*கொக்குவில்.*

**- மனைவி, மக்கள்.**

(92554)



# 31 ஆம் நாள் நினைவும்

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

பிறப்பு 1917 - 10 - 14



இறப்பு 2001 - 08 - 25

அமரர்

## நல்லையா ஸ்ரீபன் நவரத்தினம்

**உன்னதமானவரின் மறைவிலிருக்கின்றவன்**
**சர்வ வல்லவரின் நிழலில் தங்குவான்!** *சங்கீதம் 91:1*

இன்று (24.09.2001) திங்கட்கிழமை முற்பகல் அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*'இரத்தின வாசா'*
*கரவெட்டி கிழக்கு,*
*கரவெட்டி.*

- குடும்பத்தினர்

(92544)





**விமல் தயாரிப்புகளின் ஏக விநியோகஸ்தர்களான சிவா நறுமணப் பூங்கா நிறுவனத்தின் ஆதரவில் ஆயுள்வேத மருந்துகள், மூலிகைகள் பற்றிய கருத்தரங்கு அண்மையில் ஜெசித்தாரா விருந்தகத்தில் இடம்பெற்றது. பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வீ. கிருஷ்ணசாமி உரையாற்றுவதையும் டாக்டர்கள் பொ. இராமநாதன், இரா. கனகலிங்கம், சோ.சபாநாதன், ப.வேதநாதன், சே.சிவசண்முகராஜா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (ஐ)**

## உடுவில் கோட்ட அதிபர்கள் இடமாற்றம்

வலிகாமம் தெற்கு,செப்.24

உடுவில் கல்விக் கோட்ட அதிபர்கள் பலர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

ஏழாலை மகாவித்தியாலய அதிபர் ஆ.தம்பித்துரை இளைப்பாறியதைத் தொடர்ந்து ஏழாலை மகாவித்தியாலய அதிபராக உடுவில் முருகமூர்த்தி வித்தியாலய அதிபர் அ.நடராஜசுந்தரம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

குப்பிளான் விக்கினேஸ்வரா வித்தியாலய அதிபர் க.சிவகடாட்சம் உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்துக்கு அதிபராகவும் -

புன்னாலைக்கட்டுவன் அ.த.க. பாடசாலை அதிபர் எஸ்.சிவகுமார் குப்பிளான் விக்கினேஸ்வர வித்தியாலயத்துக்கு அதிபராகவும் -

இணுவில் இந்துக்கல்லூரி அதிபர் க.கனகராசா வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்துக்கு அதிபராகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

(க-152)

## அதிபர்களுக்கு சம்பள நிலுவை

யாழ்ப்பாணம்,செப்.24

அண்மையில் பதவி உயர்வு பெற்ற பாடசாலை அதிபர்களுக்கான சம்பள நிலுவைகள் 2000ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இருந்து வழங்கப்படவுள்ளது.

கல்விச் சேவை ஆணைக்குழுவினால் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பிவைத்துள்ள சுற்றுநிருபத்தில் அதிபர்களின் பதவி உயர்வின் போது பதவி உயர்வுகள் எந்தத் தேதியில் இருந்து செயற்பட்டாலும் அவர்களுக்கான சம்பள நிலுவைப் பணங்கள் 2000ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதியில் இருந்தே வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

(க-152)


# நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யா/சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலய**

கட்டட புனரமைப்புக்கு இருபது லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்து, அந்நிதியிலிருந்து பத்து லட்சம் ரூபாவை உடன் வழங்கி உதவியவர்களான



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரம், இந்து சமய கலாசார அமைச்சரும் , ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதம அமைப்பாளருமான
**கௌரவ கா.வே.குகேந்திரன்**
(ஜெகன்)
அவர்களையும்



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தீவக அமைப்பாளருமான
**உயர்திரு.ந.மதனராஜா J.P.U.M.**
அவர்களையும்



வேலணைப் பிரதேச சபைத் தலைவர்
**உயர்திரு.ந.கருணாகரகுருமூர்த்தி J.P.U.M.**
அவர்களையும்

நன்றியுடன் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமி
மத்திய மகாவித்தியாலயம்,
வேலணை.

(92562)



# முக்கிய அறிவித்தல்

**வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி.**

கிராமிய வங்கி மீதிகளை உறுதிப்படுத்தல்.

மேற்படி சங்கத்தில் 31.05.2001இற்கான கிராமிய வங்கிகளின் கணக்கு மீதிகள் கணக்காய்வாளர்களால் உறுதிப்படுத்தப்படவிருப்பதனால், குறிப்பிடப்பட்ட கிராமிய வங்கிகளில் கணக்குகளை வைத்திருப்போர் பின்வரும் திகதிகளில், தங்களது கையேடுகளை சமர்ப்பித்து கணக்கு மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

| காலம் | நேரம் | இடம் |
|---|---|---|
| 28.09.2001 வெள்ளி | 9.00 - 4.30 | நீர்வேலி கிராமிய வங்கி |
| 01.10.2001 திங்கள் | 9.00 - 4.30 | உரும்பிராய் கிராமிய வங்கி |
| 02.10.2001 செவ்வாய் | 9.00 - 4.30 | கோப்பாய் கிராமிய வங்கி |

*நீர்வேலி.* (C/18347)

ரு.ஆனந்தவேல்
*கணக்காய்வாளர்.*



**G.A.Q. 1st in Com. யாழ்., பேராதனை கல்வியாண்டு 2002/2003 (வெளிவாரி)**

☞ A/Lஇல் கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் இவற்றில் 3 பாடங்கள் சித்தி அடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் இப்பரீட்சைக்குத் தகுதி உடையவர்களாவர்.

☞ இவற்றுக்குரிய பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

இவற்றுக்குரிய விரிவுரைகள் ஆரம்பம்:- 29-09-2001

*புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம், யாழ்ப்பாணம்.* (92397)

S.அருள்நங்கை,
*நிர்வாகி*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

ஐயாத்துரை கிருஷ்ணதாசன் என்பவருடைய தே.அ.அ. (இல. 592042703v), வி.அ.அ. இரண்டும் யாழ். பஸ் நிலையப் பகுதியில் கைப்பையுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து திரு. கிருஷ்ணதாசன், வராகி அம்மன் கோயில் வீதி, கொக்குவில் மேற்கு என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (92593)

28, குமாரசாமி வீதி, கந்தர்மடத்தில் தற்காலிகமாக வசிக்கும் நமசிவாயம மகாதேவன் என்பவரது தேசிய அ.அட்டை (இல.240560178 ) 19.09.2001 புதனன்று ஸ்ரான்லி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சிவன் ஸ்ரோர்ஸ், பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

(92607)

## வீடற்றவன்

வானம்பாடிச் சேவையில் "வெள்ளம்" நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல் "வீடற்றவன் நாவலின் விளக்கமும் விமர்சனமும்". க.பொ.த. சாதாரண தர மாணவர்கள் தமிழ் இலக்கியம் கற்கப்பயன்படும்.

(92606)

# வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்மா,
வாதநோய்கள், வலிப்புநோய்,
பீனிசம், தலையிடி,
தலை, கால் அவியல்,
சரும நோய்கள்,
மாதவிடாய்க் குத்து,
இரத்தப் போக்கு,
வெள்ளைக் கசிவு, கருவழிதல்,
மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு, மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபலமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்.

வேலணை
வைத்திய கலாநிதி
**சி. இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2459 (92592)

## சைவநெறித் தேர்வு நவம்பர் 4இல்

யாழ்ப்பாணம்,செப்.24

யாழ. சைவ பரிபாலன சபையினரால் நடத்தப்படும் வருடாந்த சைவ நெறித்தேர்வு 'எதிர்வரும் நவம்பர் மாதம் 4ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யாழப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் நடைபெறவுள்ள இந்தப் பரீட்சைக்கு 345 பாடசாலைகளைச் சேர்ந்த 61 ஆயிரத்து 905 மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர் என சைவ பரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் தெரிவித்தார்.

இந்தப் பரீட்சைக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்திசெய்யப் பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-7)

## தேசிய கல்வி நிறுவக டிப்ளோமா கற்கைநெறி

யாழ்ப்பாணம்,செப்.24

தேசிய கல்வி நிறுவகம் 2002/2003ஆம் கல்வி ஆண்டுக்கான கல்வி டிப்ளோமாக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் யாழ்.இந்துக் கல்லூரியில்"இயங்கும் தேசிய கல்வி நிறுவகத்தின் பிராந்திய கற்கை நிலையத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி த.வில்வநாதனிடம் விண்ணப்பப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கற்கைநெறிக்கான விண்ணப்ப முடிவுதிகதி அடுத்தமாதம் 15 ஆம் திகதியாகும்.

(க-7)

இளம் வீரர்களுக்கான

## மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டி

யாழ்.புனித சாள்ஸ் மகா வித்தியாலய 125ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பழைய மாணவர் சங்கம் 15 வயது பிரிவுக்குட்பட்டோருக்கான மாபெரும் மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டியை நடத்துகிறது.

போட்டிக்கான விண்ணப்பப்படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி:** *26. 09. 2001*

(92603) - செயலாளர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 20 - 05 - 1944

விண்ணில் 05 - 10 - 2000

## அமரர் தம்பையா சொர்ணலிங்கம்

திதி: 24-09-2001

**பாசமுள்ள நாயகனே! அப்பாவே!**

எம்மை நீர் பிரிந்து ஓராண்டானதையா!
உம்மையே நினைந்தெம்முள்ளம் ஏங்குதையா!
தம்மையே எண்ணித் தவிக்கின்றோமையா!
இம்மையி லெப்போ துமைக் காண்போ மினி?

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.*
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இணுவில் கிழக்கு,
இணுவில். (92604)

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், உறவினர்கள்.

நெஞ்சினை நெகிழவைக்கும்

# முதலாவது ஆண்டு நினைவுத் துளிகள்..!



மலர்வு 06 - 10 - 1961

உதிர்வு 24 - 09 - 2000

நாரந்தனை கிழக்கைப் பிறப்பிடமாகவும்
கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் வீரசிங்கம் உதயகுமார் (B.Sc.)

(ஆசிரியர் - யா/புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை.)

திதி: 13-10-2001

*பாசத்தின் திருவுருவே! பண்பான அப்பாவே! – உம்*
*பாலகரைப் பரிதவிக்க விட்டுப் பறந்துசென்ற மாயமென்ன?*
*கதறி அழுதாலும் எம் கவலை தீராதப்பா!*
*காலங்கள் உள்ளவரை கண்ணீர்தான் எங்களுக்கு!*
*இனியவனே! உம்மை இதயத்தில் இருத்திவிட்டு*
*இருளில் தவிக்கின்றோம். நாம் இன்னலில் துடிக்கின்றோம்!*
*உதயமேயின்றி உருக்குலைந்து வாடுகின்றோம்!!*
*ஓராண்டென்ன ஒரு ஜென்மம் போனாலும் ஓயாது எம்துயரம்!!!*

*பிரிவால் துயருறும்:*
அன்பு **மனைவி,**
ஆருயிர்ச் செல்வங்கள்:
**ஹோபிஷா, சாகித்தியன்**
**குடும்பத்தினர்.**

374, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(92601)

# மரண அறிவித்தல்

## திருமதி மகேசன் கனகாம்பிகை

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு-15ஐ வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேசன் கனகாம்பிகை 22.09.2001 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரு மகேசன் (இளைப்பாறிய நிர்வாக அலுவலர், யாழ்.கச்சேரி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சர்வேசன் மற்றும் சர்வாம்பிகை ஆகியோரின் அன்புத் தாயாரும் S.விக்னேஸ்வரன் (தபால் அதிபர்) அவர்களின் மாமியாரும், மைத்திரேயியின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.09.2001) திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
**ச.தணிகாசலம்.** J.P.
(சகோதரன்)

*363/1, அலுத்மாவத்த வீதி,*
*கொழும்பு-15.*
***T.P. - 524758***

# கல்விச்சாலைக் காட்சிகள்



அல்வாய் மனோகரா முன்பள்ளியின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி அண்மையில் நடைபெற்றது. பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட கரவெட்டி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் முதலாமிடத்தைப் பெற்ற மாணவி நவனேசன் நிதர்சனாவுக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

*(படம்:-நெல்லியடி செய்தியாளர்)*



நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற தமிழ் விழாவில் அரங்கேறிய சிறுவர் நாடகத்தின் ஒரு காட்சி இது. (ஐ)



உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவின்போது பாடசாலைக்குச் சேவையாற்றிய லயன் இ.நடராசா பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

அவருக்கு யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். வித்தியாலய அதிபர் சு.யோகராசா, பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் க.கணேசலிங்கம் ஆகியோர் அருகில் உள்ளனர். (ஐ)



கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தின் 'ஏணி' சஞ்சிகை வெளியீட்டு விழாவில் கல்லூரி அதிபர் க.செல்வராசாவிடமிருந்து, வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா முதலாவது பிரதியைப் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். உதவிக் கல்விப் பணிப்பாளர் க.அம்பலவாணரும் அருகில் உள்ளார்.

*(படம்:-வடமராட்சி செய்தியாளர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள

# 240 குடும்பங்களுக்கு விரைவில் வீடுகள் அமைத்துத்தர ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப். 2

இடம்பெயர்ந்த நிலையில் நீண்ட காலமாக நலன்புரி நிலையங்களில் தங்கிவாழும் மக்களுக்காக அரை நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

## ஐ. நா. தூதரகம் நிதி ஒதுக்கீடு

இத்திட்டத்தின் கீழ் உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் 40 குடும்பங்களும், பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 200 குடும்பங்களும் பயன்பெறவுள்ளன.

இத்திட்டத்துக்காக வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு—கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சிகளையடுத்து அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் 60 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

அதேபோல்ஒவ்வொருகுடும்பத்துக்கும் தலா இருபத்தையாயிரம் ரூபா வீதம் சுமார் 60 லட்சம் ரூபாவை வடக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபை ஒதுக்கீடு செய்துள்ளது.

இத்திட்டத்தின் கீழான வீடுகள் சிமெந்தினால் கட்டப்பட்ட போதும் அவை அரை நிரந்தரத் தன்மையைக் கொண்டிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது — இப்படி ஈ. பி. டி. பி. வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

(க)

## ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் இடமாற்றம்

காரைநகர், செப். 24

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இருந்த நான்கு விரிவுரையாளர்கள் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கல்விச்சேவை ஆணைக்குழுவினால் இவர்களுக்கான இடமாற்றக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இந்த விரிவுரையாளர்கள் கடந்த வாரம் முதல் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் கடமைப் பொறுப்புக்களை ஏற்றுள்ளனர்.

(க-73)

## கப்பல் மீதான...

(4 ஆம் பக்கத் தொடர்)

அதற்குள் இருந்த அனைவரும் இறந்துவிட்டதாகவும் அறிந்தேன். நான் அதன் பின்பு சண்டை நடந்த இடத்திற்குச் சென்றேன். அப்போதும் சண்டைதொடர்ந்து கொண்டிருந்தது.

இத்தாக்குதல் மாலை 5 மணிவரை நீடித்தது. அதன் பின்னர் புலிகள் பின்வாங்கிச் சென்றுவிட்டனர். நாம் இரவு 10 மணியளவில் மீண்டும் காங்கேசன்துறைத் துறைமுகத்தை வந்தடைந்தோம் என்றார்.

### பொலீஸ் அதிகாரி சாட்சியம்

காங்கேசன்துறை பொலீஸ் நிலையக் குற்றத் தடுப்புப பொறுப்பதிகாரிதமது சாட்சியத்தில் கூறியதாவது:-

நான் பொலீஸ் நிலையத்தில் இருக்கும்போது கடற்படை அதிகாரியான எஸ். தக்நாயக்கா என்பவர் வந்து (பிறைட் ஒவ் சவுத்) என்ற கப்பலுக்குப் பாதுகாப்பு வழங்கிக்கொண்டு வந்த இலங்கைக் கடற்படைக்குச் சொந்தமான டோறாப் படகுகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும், இடையே ஏற்பட்ட சண்டையில் 11 கடற்படை உத்தியோகத்தர்கள் மரணம் அடைந்துள்ளனர் என்றும்—

அவர்களின் சடலங்கள் பலாலியில் அமைந்துள்ள இராணுவ ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டார். நான் உரிய அலுவலரின் முறைப்பாட்டைத் தொடர்ந்து எமது மேலதிகாரியின் பணிப்பின் பேரில் சென்று அந்தச் சடலங்களைப் பார்வையிட்டேன்.

அப்போது இறந்தவர்களின் பெயர்கள், இலக்கங்கள் என்பன கடற்படை அதிகாரியான எஸ். தகநாயக்காவினால் எனக்குத் தனித்தனியாக அடையாளம் காட்டப்பட்டுக் கூறப்பட்டது என்றும் குறிப்பிட்டார்.

எட்டுப்பேர் இறந்த டோறாப் படகில் இருந்த ஒருவர் உயிருடன் இருக்கிறார் என்றும், அவர் கடும் காயங்களுடன் கொழும்பு இராணுவ வைத்தியசாலையில் தற்பொழுது சிகிச்சை பெற்று வருகின்றார் என்றும், அவர் சிகிச்சை முடிந்த பின்னர் நீதிமன்றில் சாட்சியம் அளிப்பார் என்றும் கடற்படை அதிகாரியான தகநாயக்கா நீதிமன்றில்குறிப்பிட்டார்.

(க-86)

பாடசாலைகளுக்கு வழங்கப்படும்

# உள்வீடு நிதியை கையாள்வது தொடர்பான அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், செப். 24

பாடசாலைகளில் மாணவர், ஆசிரியர்களின் கற்றல் — கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு உரிய தரஉள்வீடு தொடர்பான செயற்பாடுகளில் கண்டிப்பான நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படவுள்ளன.

பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் மற்றும கற்பிக்கும் ஆசிரியர்களின் வசதிகளை மேம்படுத்தும் நோக்குடன் கற்பித்தல் துணைச்சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்கெனக் கடந்த வருடம் முதல் பாடசாலைகளின் தரத்திற்கு ஏற்ப தரஉள்வீடு நிதி வழங்கப்பட்டு வருகின்றது.

ஆண்டு தோறும் வழங்கப்படும் இந்த நிதியை அதற்கென வங்கிகளில் ஆரம்பிக்கப்பட்ட விசேட வங்கிக் கணக்குக்களில் வைப்புச் செய்து பயன்படுத்துவதற்கு பாடசாலைகள் ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

கடந்த வருடம் ஒதுக்கீடு செய்யப்பட்ட உள்வீடு நிதி தொடர்பான செயற்பாடுகள் உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் கையாளப்படாமை வலயக் கல்வித்திணைக்கள பரிசோதனையின் போது சில பாடசாலைகளில் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே தர உள்வீடு தொடர்பான செயற்பாடுகளை உரிய முறையில் கடைப்பிடிக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

தரஉள்வீடு தொடர்பான ஒதுக்கீடுகள் முன்அனுமதி பெற்றுக் கொள்வனவு செய்யப்படுவதுடன், கொள்வனவுசெய்யப்பட்ட பொருள்களின் முழுமையான விவரம் பாடசாலைச் சமூகத்திற்குத் தெரியப்படுத்தும் நோக்குடன் விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-7-11)

## கோப்பாய் திருட்டுகள் பிரதேசத்தில் அதிகரிப்பு

கோப்பாய், செப். 24

கோப்பாய் மத்திய பகுதியில் நேற்று முன்தினம் இரவு வீடு ஒன்றின் ஜன்னல் கம்பிகளைப் பிரித்து உள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்து தங்கச் சங்கிலியையும், சைக்கிளையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இப்பகுதியில் கடந்த ஒரு வார காலப்பகுதியில் இடம்பெற்றிருக்கும் ஐந்தாவது திருட்டுச் சம்பவம் இதுவாகும்.

இத்திருட்டுக்கள் தொடர்பாக கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் முறையிடப்பட்டபோதும் திருடர்களோ அன்றி திருடப்பட்ட பொருள்களோ இதுவரை சிக்கவில்லை.

கோப்பாய்ப் பகுதியில் அண்மைக்காலத்தில் கால்நடைகளும் திருடப்பட்டுள்ளன.

(ஐ-72-15)

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு, செப். 24

வலிகாமம் வலய தெல்லிப்பழை கல்விக்கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அளவெட்டி அருணோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:-

### 16 வயதுப் பிரிவு

அருணோதயக் கல்லூரி எதிர் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்.

வயாவிளான்ம.ம. வி. எதிர் மல்லாகம் குளமங்கால் றோ. க. வித்தியாலயம்.

### 18 வயதுப் பிரிவு

தெல்லிப்பழை கட்டுவன் புலம் வித்தியாலயம் எதிர் மல்லாகம் ம. வி. (க-86)

★ ★ ★

வலி.வடக்கு, செப். 24

வலிகாமம் உதைபந்தாட்டத்தின் அனுசரணையுடன் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம், நவாலி அட்டகிரி விளையாட்டு மைதானத்தில் நடத்திவரும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இறுதிப் போட்டியில் இன்று ஞாயிறுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளும் அணிகள் வருமாறு:-

### பிரிவு I

மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்க வி. க. எதிர் நவாலி சென். பீற்றர்ஸ் வி.க. கழகம்.

### பிரிவு II

ஊரெழு பாரதி வி.க. கழகம் எதிர் சுன்னாகம் மயிலங்காடு ஞானமுருகன் வி. க. கழகம். (க-86)

★ ★ ★

வலி. வடக்கு, செப். 24

வலிகாமம் வலய சண்டிலிப்பாய் கல்விக்கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:-

### 16 வயதுப் பிரிவு

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி எதிர் பண்டத்தரிப்பு யெசிந்தா றோ. க. பாடசாலை.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் மாதகல் சென். ஜோசப் வித்தியாலயம்.

### 18 வயதுப் பிரிவு

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி. (க-86-152)

யாழ். சிறைச்சாலையில்

# கைதிகளைப் பார்வையிடும் நடைமுறையில் மாற்றமில்லை

பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை வாரத்தில் ஆறு நாள்களும் பார்வையிடலாம் என்று சிறைச்சாலை ஆணையாளர் அறிவித்திருந்த போதும்—

அந்த நடைமுறை யாழ். சிறைச்சாலையில் அமுலுக்கு வரவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

சிறைச்சாலை ஆணையாளரினால் வெளியிடப்பட்ட இந்த நடைமுறை தொடர்பான சுற்றறிக்கை வடக்கு—கிழக்கில் உள்ள சிறைச்சாலைகளுக்கும் அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் யாழ். சிறைச்சாலையில் பழைய சுற்றறிக்கையின் பிரகாரம் செவ்வாய், ஞாயிறு ஆகிய தினங்களிலேயே கைதிகளைப் பார்வையிட அனுமதிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

புதிய நடைமுறை தொடர்பான சுற்றறிக்கை தமக்குக் கிடைக்கவில்லை என்று யாழ். சிறைச்சாலை அதிகாரிகள் கூறியதாக கைதிகளின் உறவினர்கள் தெரிவித்தனர்.

(ஐ-3-86)

# மிதிவெடியில் சிக்கி தாயும் மகனும் காயம்

தென்மராட்சிப் பகுதிகளில் தொடர்ந்து இடம்பெற்று வரும் மிதிவெடிச் சம்பவங்களில் நேற்று தாயும் மகனும் மிதிவெடியில் சிக்குண்டு காயமடைந்தனர்.

சாவகச்சேரி பெருங்குளம் பிள்ளையார் கோயில் பகுதியிலுள்ள தமது வீட்டைப் பார்க்கச் சென்றவேளையே, அங்கிருந்த விறகைக் கட்டிக் கொண்டுவர முற்பட்ட தாயும் மகனும் மிதிவெடியில் சிக்குண்டனர்.

இடம்பெயர்ந்து ஆனைக்கோட்டை ஆறுகால்மடம் பகுதியில் வசிக்கும் பாலச்சந்திரன் கோளேஸ்வரி (வயது 42) என்பவர் மிதிவெடிச் சிதறலினால் இடதுகாலில் காயமடைந்தார். மிதிவெடியை மிதித்த இவரது மகன் பாலச்சந்திரன் கயேந்திரன் (வயது 17) இடதுகாலை முழங்காலுக்குக்கீழ் இழந்து, படுகாயமடைந்தார்

காயமடைந்த இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ஐ-4-15-ரி)

# வர்த்தகரைத் தாக்கிவிட்டு பணத்தை அபகரித்த கும்பல்

## தென் புலோலியில் சம்பவம்

வடமராட்சி, செப். 24

கடையைப் பூட்டிவிட்டு இரவுவேளை வீடு திரும்பிக் கொண்டிருந்த வர்த்தகரும் அவரது உதவியாளரும் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டு பெருந்தொகைப் பணம் கொள்ளை அடிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு தென்புலோலி முறாவில் எனும் இடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

அன்றைய தினம் இரவு மந்திகையில் உள்ள தனது கடையைப் பூட்டிவிட்டு வர்த்தகரும் உதவியாளரும் பணத்துடன் சைக்கிள்களில் வீடு சென்றுகொண்டிருந்த வேளையில் எதிரே தோன்றிய இனந்தெரியாத கோஷ்டியினர் அவர்களைத் தாக்கிச் சேட்டுளைக் கிழித்து எறிந்துவிட்டுப் பெருந்தொகைப் பணம், அடையாள அட்டைகள், சைக்கிள்கள் என்பனவற்றைப் பறித்துக்கொண்டு சென்றுவிட்டனர்.

மறுநாள் காலை ரோந்து சென்ற இராணுவத்தினரால் வயல் பகுதியில் அநாதரவாக விடப்பட்ட சைக்கிள்கள் மீட்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

இச்சம்பவம் குறித்துப் பருத்தித்துறைப் பொலீஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

(ஐ-117-173)

# பாடசாலைகளுக்கு மலசலகூட வசதி

யாழ்ப்பாணம், செப்.24

குடாநாட்டில் சுகாதார வசதிகளற்ற பாடசாலைகளுக்கு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் மலசலகூட வசதிகள் மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்தி வருவதாக அந்த நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதற்கென தற்போது 100 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும்—

இவற்றில் 60 பாடசாலைகளில் உடனடியாக வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும்—

தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

இதுவரை 230 பாடசாலைகளுக்கு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் 5 கோடி 20 லட்சம் ரூபா செலவில் மலசலகூட வசதிகளை ஏற்படுத்தி வழங்கியிருப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ஐ-4-ரி)

# பரீட்சை

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைகாண் பரீட்சை எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற உள்ளது.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் முதற்தடவையாக நடத்தப்படும் இந்தப் பரீட்சை யாழ்ப்பாணத்திலும் நடைபெற உள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து 300க்கும் மேற்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இந்தப் பரீட்சையில் தோற்ற உள்ளனர். யாழ். இந்துக் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் இந்தப் பரீட்சை நடைபெறவுள்ளது. (க-73

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கால்நடைச் சந்தை நவிண்டிலில் ஆரம்பம்

வடமராட்சி,செப்.24

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் உள்ள நவிண்டிலில் கால்நடைச் சந்தை ஒன்று அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இச்சந்தையை கரவெட்டி கால்நடை வளர்ப்போர் சங்கம் ஆரம்பித்துள்ளது.

இதுபோன்ற சந்தை ஒன்று வடமராட்சி கால்நடை வளர்ப்போர் சங்கத்தினால் புலோலியில் நடத்தப்பட்டுவருகிறது.

இச்சந்தையல் கால்நடைகளை வாங்குவதற்கும், விற்பதற்கும் கால்நடை வளர்ப்போருக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.(க-173)

## சாரதி 'லைசென்ஸ்' செய்முறைப் பரீட்சை:

# பயிலுநர் காப்புறுதிப் பத்திரம் பெற வாகன உரிமையாளர் கடிதம் தேவை

யாழ்ப்பாணம்,செப்.24

சாரதி அனுமதிப்பத்திரம் (லைசென்ஸ்) பெறுவதற்கான செய்முறைப் பரீட்சையில் தோற்றுவதற்காகக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத் திடம் பயிலுநர் காப்புறுதிப் பத்திரம் பெறுவதற்கு விண்ணப்பிப்பவர்கள் அந்தப் பரீட்சையின் போது தாம் பாவிக்கும வாகனத்தின் உரிமையாளரிடம் சம்மதக் கடிதம் ஒன்றைப் பெற்று வரவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் காப்புறுதிக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் விளக்கமளிக்கையில் -

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான செய்முறைப் பரீட்சையின் போது தமது சொந்த வாகனங்களைச் செலுத்துபவர்கள் இந்தப் பயிலுநர் காப்புறுதியைப் பெறவேண்டியதில்லை.

அவ்வாறில்லாமல் பிறரது வாகனங்களைச் செலுத்தும் சாரதிகள் அந்த வாகனங்களின் உரிமையாளரிடம் வாகனத்தைப் பயன்படுத்துவதற்கான அனுமதிக் கடிதத்தைப் பெற்று வந்தால் மட்டுமே அவர்களுக்கு பயிலுநர் காப்புறுதிப்பத்திரம் வழங்கப்படும் - என்றார். (க-4)

## மாணவருக்கான பேச்சுப் போட்டி

பருத்தித்துறை,செப்.24

வடமராட்சி வலயத் திணைக்களம் போரூட் ஒளி நிறுவனத்தின் அனுசரணையுடன் பாடசாலை மாணவர்களுக்கான சர்வதேச தினங்கள் தொடர்பான பேச்சுப் போட்டி நடைபெறவுள்ளது.

இப்பேச்சுப் போட்டியின் தலைப்பு "ஒழுக்கம் விழுப்பம் தரலால்" ஆகும். இதற்கான விண்ணப்பப்படிவங்களை இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(க-118)

## கலைப் பீடத்தினருக்கு நூலக அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.24

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட புகுமுக மாணவர்களுக்கான நூலக அறிமுக நிகழ்வு இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக நூலகத்திற்கு பகுதி பகுதியாக அழைத்துச் செல்லப்படும் புகுமுக மாணவர்களுக்கு நூலகத்தை கையாள்வது எவ்வாறு என்று விரிவாக விளக்கமளிக்கப்படவிருப்பதாக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் அறிவித்துள்ளார். (க-4)

## உதவித் தொகைக்கான காசோலைகள்

வடமராட்சிப் பிரதேசத்தில் கடந்த வருடத்தில் நீரடைப்பு மலகூடங்களை அமைத்தோருக்கான சுகாதார அமைச்சின் உதவித் தொகைக்கான காசோலைகள் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

உதவித் தொகைக்கு விண்ணப்பித்தவர்கள் காசோலைகளை வந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (க-173)

## சுகாதாரம் குறித்து அதிகாரிகள் தீவிர கவனம்

வடமராட்சி கிழக்கு,செப்.24

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த உற்சவத்தையடுத்து அப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கடைகளில் சுகாதாரம் பேணப்படுகின்றனவா என்பது பற்றி அப்பகுதி பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர்.

ஐஸ்கிறீம் கடைகள், உணவகங்கள் மற்றும் இனிப்புப் பண்டங்கள் விற்பனை செய்யும் கடைகள் ஆகியவற்றில் சுகாதாரம் பேணப்படுவது சம்பந்தமாகவும், காலாவதியான பொருள்கள் விற்பனை சம்பந்தமாகவும் அவர்கள் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர். (க-182)

## சட்டவிரோத கட்டடங்கள் அகற்றப்படும்

பருத்தித்துறை நகர சபைக்குச் சொந்தமான தென்னங் கிணற்றடிக் காணியில் கட்டப்பட்டுள்ள சட்டவிரோத கட்டடங்கள் விரைவில் அகற்றப்படவுள்ளன. இக்கட்டடங்களை உடன் அகற்றுமாறு யாழ்.அரச அதிபர் பருத்தித்துறை நகர சபைக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து சட்டவிரோத கட்டடங்களை அகற்றும் பணியை பருத்தித்துறை நகரசபை விரைவில் ஆரம்பிக்கவுள்ளன. (க-173)

## இவர்களுக்கு அழைப்பு

தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் தொடர்பான ஆள்கொணர்வு மனுக்களைத் தாக்கல் செய்வதற்காகப் பின்வருவோரை யாழ்.மணியம் கட்டடத்தில் இயங்கும் மனித கௌரவத்துக்கான மன்றத்துக்குச் சமுகமளிக்குமாறு மன்ற இணைப்பாளர் கேட்டுள்ளார்.

அழைக்கப்பட்டோர் விவரம் வருமாறு:-

★நாகராஜா திலகவதி (வயற்கரை, மீசாலை வடக்கு.)

★மகேந்திரன் தவமணி (செருக்கன் புலம், சுழிபுரம்.)

★எஸ்.ஜெயபாலசிங்கம் - சின்னத்தம்பி இராசையா (கைதடி வடக்கு, கைதடி.) (க-7)

## சிறப்புற நடந்த சிந்தாத்திரை மாதா உற்சவம்

கத்தோலிக்கர்களின் புனித யாத்திரைத் திருத்தலங்களில் ஒன்றான வேலணை - சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலயத்தின் வருடாந்தப் பெருவிழாவும், திருச்சொரூப பவனியும் நேற்று முன்தினம் சனிக்கிழமை சிறப்புற இடம்பெற்றன.

யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருடாந்தப் பெருவிழாவில் கலந்துகொண்டனர்.

அன்றைய தினம் காலை 9 மணிக்கு யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் திருநாள் திருப்பலியை நிறைவேற்றினார். தொடர்ந்து திருச்சொரூப பவனி நடைபெற்றது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினர் விசேட போக்குவரத்துச் சேவைகளை ஒழுங்கு செய்திருந்தனர். அல்லைப்பிட்டிச் சோதனைச் சாவடியில் கடற்படையினரும் விசேட சோதனை நிலையங்களை அமைத்து பக்தர்களின் போக்குவரத்துக்கு ஒத்துழைத்தனர். (க-7-17)

## மாணவருக்கு பிறப்புச் சான்றிதழ்

பருத்தித்துறை,செப்.24

வடமராட்சி கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான பிறப்புச் சான்றிதழ் பெற்றுக்கொடுப்பதற்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் முன்வந்துள்ளது.

பிறப்புச் சான்றிதழ் இல்லாத மாணவர்களின் விவரங்களை உடன் அனுப்பிவைக்குமாறு வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி அறிவித்துள்ளார். (க-118)

## புதிய சி.ஐ.டி. குழு வருகிறது

காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கென விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவின் மற்றுமொரு குழுவினர் இந்த வாரம் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

இந்தக் குழு யாழ்.வந்து சேர்ந்ததும் தற்போது விசாரணைகளை நடத்திவரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு திரும்புவர் என யாழ்.பொலீஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-4)

## சத்திரசிகிச்சை மூலம்

# 3 கிலோ நிறையுடைய 'பொலித்தீன்' பசு வயிற்றிலிருந்து அகற்றப்பட்டது

சாவகச்சேரி,செப்.24

பொலித்தீன் பைகளை உட்கொண்டதால் அவஸ்தைப்பட்ட பசு ஒன்று சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுப் பொலித்தீன் பைகள் அகற்றப்பட்டதை அடுத்து உயிர் பிழைத்துக்கொண்டது.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளியன்று உடுப்பிட்டி - இலக்கணாவத்தைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரிவிக்கப்படுவதாவது:-

மேய்ச்சலுக்காக அவிழ்த்து விடப்படும் இந்தப் பசுமாடு கடந்த ஒரு வார காலமாகச் சாணம் போடாமல் வயிறு வீங்கிய நிலையில் வேதனைப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

மாட்டின் சொந்தக்காரர் கை வைத்தியங்கள் பலவற்றைச் செய்தும் அவை பலனளிக்காத நிலையில் புலோலி மிருக வைத்திய அதிகாரியான எஸ்.வைரவநாதனை நாடினார். அவர் சத்திரசிகிச்சை செய்து 3 கிலோ நிறையுள்ள பொலித்தீன் பை, சர்க்கரை மூடையின் பொலித்தீன் பைகள், கயிறுகள் என்பனவற்றை அகற்றினார்.

சத்திரசிகிச்சையை அடுத்துப் பசு திடகாத்திரமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-7-31)

# மலேரியா விழிப்புணர்வுப் போட்டி: மாணவர் பரிசளிப்பு நிகழ்வு

வடமராட்சி கிழக்கு,செப்.24

வடமராட்சி கிழக்கில் மலேரியா தடுப்பு வாரத்தையொட்டி பாடசாலை மாணவர்களிடையே மலேரியா விழிப்புணர்வு சம்பந்தமாக போட்டி நடத்தப்பட்டது.

இப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர் பற்றிய விவரம் வருமாறு:-

முதலாம் இடம்: சி.றெஜிகரன் - அம்பன் அ.மி.த.பாடசாலை, ச.சபிதா - குடத்தனை அ.த.க. பாடசாலை,

இரண்டாம் இடம்: சூ.கதிர்ச்செல்வன் - குடத்தனை அ.மி.த.க. பாடசாலை, சி.சிந்துஜன் - வரணி சுப்பிரமணியம் வித்தியாசாலை,

மூன்றாம் இடம்: ப.சரிதா - குடத்தனை அ.த.க. பாடசாலை, லோ. கனிமொழி - அம்பன் அ.மி.த.க. பாடசாலை.

இப்போட்டிகள் வடமராட்சி கிழக்கு மலேரியா கட்டுப்பாட்டுக் குழுவின் அனுசரணையுடன் சுகாதாரத் திணைக்களத்தினால் நடத்தப்பட்டன.

போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு, குடத்தனை தென்னிந்தியசபை மண்டபத்தில் வண.பிதா அன்ரனி சுதாகர் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் உமா சிவபாதசுந்தரம் பரிசில்களை வழங்கினார். (க-182)

## இளம்பெண் காயம்

யாழ்ப்பாணம்,செப்.24

இறைத்து வற்றிய கிணற்றில் தவறி விழுந்து இளம்பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

சங்கானையில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த திருச்செல்வம் ஜெஸ்கா (வயது21) என்பவரே படுகாயமடைந்து யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-15)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி லோறன்ஸ் அன்னம்மா

நெடுந்தீவு மத்தியைப் பிறப்பிடமாகவும், கரியநாகபடுவானில் வசித்தவருமாகிய திருமதி லோறன்ஸ் அன்னம்மா 20.09.2001 வியாழனன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மரியான் லோறன்ஸ் (சின்னத்துரை) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான யேக்கப் - லூயிசா தம்பதியினரின் புதல்வியும், வில்வராஜசிங்கம் (தபால் அதிபர், வண்ணார்பண்ணை), மேரி இமல்டா, காலஞ்சென்ற நோபேட்சிங்கம் மற்றும் மேரி அனஸ்ரா, சிறீதரன், காலஞ்சென்ற புஸ்பலதா (ஆசிரியை), மற்றும் பரராஜசிங்கம், பேபி சகிலா (முகாமையாளர், ப.நோ.கூ.சங்கம்), வரராஜசிங்கம், அமலா ஆகியோரின் பாசமிகு அன்னையும், இலங்கேஸ்வரி, காலஞ்சென்ற பேதுருப்பிள்ளை மற்றும் சுகிர்தகுமாரி, றின்சா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.09.2001 வெள்ளிக்கிழமை வன்னியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*26/1, மத்திய கிழக்கு வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.* (92605)

தகவல்: வில்வராஜசிங்கம். (மகன்)

### செல்வி
## சிவரூபராணி வேலுப்பிள்ளை (ரூபி)

(ஆசிரியை, யா/தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலயம்)

தொல்புரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் சங்கரத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சிவரூபராணி வேலுப்பிள்ளை (ரூபி) 22.09.2001 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற லிங்கேஸ்வரன் மற்றும் மகேஸ்வரன் (பாப்பா - சுன்னாகம், ப.நோ.கூ.சங்கம்), யாழினி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், நாளினியின் மைத்துனியும் ஆரணி, கஜனுகா ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (23-09-2001) ஞாயிற்றுக்கிழமை வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*சங்கரத்தை, வட்டுக்கோட்டை.* (92611)

*தகவல்:* வே.மகேஸ்வரன் (பாப்பா - சகோதரன்)

## திருமதி கொண்டம்மாள் (சீதாப்பாட்டி)

யாழ்ப்பாணம், வண்ணை சிவன் கோயிலடி, 270, காங்கேசன்துறை வீதியைச் சேர்ந்த திருமதி கொண்டம்மாள் (சீதாப்பாட்டி) நேற்று (23-09-2001) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24-09-2001) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவன் கோயிலடி, யாழ்ப்பாணம்.* (92612)

*தகவல்:* செல்வா

# நெஞ்சகலா நினைவஞ்சலி

முதலாம் ஆண்டு | ஐந்தாம் ஆண்டு



அமரர் கந்தன் இராசு

அன்னையின் மடியில்
20-06-1942 ⟷ 20-07-1947

இறைவன் அடியில்
05-10-2000 ⟷ 14-11-1996



திருமதி இராசு இராசம்மா

எங்கள் குடும்பத்தின் குல விளக்குகளே!
எங்கள் நெஞ்சம் துடிக்குதையோ! உங்களை எண்ணி!!
நீங்கள் எம்மிடம் விட்டுச்சென்ற பணிகளை மீண்டும்
எங்களால் தொடர உங்கள் ஆசி வேண்டுகிறோம்!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

ஆதியாமலை, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி. (92609)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்சங்கத்தைப் பலப்படுத்த ஜே.வி.பி. முழுவீச்சில் முயற்சி!

## போராட்டங்களுக்கும் ஆயத்தமாகின்றது

கொழும்பு,செப்.24

அரச மற்றும் தனியார் துறைகளில் தமக்குச் சார்பான தொழிற் சங்கங்களைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் ஜே.வி.பி. தற்சமயம் ஈடுபட்டுள்ளது.

அரசுடன் இணைந்து தகுதி காண் அரசு ஒன்றை அமைத்துச் செயற்படும் ஜே.வி.பி., தனது எதிர் காலத் திட்டங்களுக்கு உதவும் வகையில் தொழிற்சங்கங்களைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளது.

சோஷலிச தொழிலாளர் அமைப்பு என்ற தனது தொழிற் சங்கத்தின் கிளைகளை சகல அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் அமைக்கும் பணிகள் முழுவீச்சில் இடம்பெறுவதாக அதன் அமைப்பாளர் லாக்கந்த தெரிவித்துள்ளார்.

வாழ்க்கைச்செலவு, அரச ஊழியர்களின் சம்பள உயர்வு போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டுமாயின் தொழிற்சங்கப் போராட்டங்கள் அவசியம் என்றும் -

அதற்காக தொழிற்சங்கத்தைப் பலப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டிருப்பதாகவும் -

அவர் கூறியுள்ளார்.

உல்லாசப்பயணத்துறை வீழ்ச்சி கண்டுள்ளதைக் காரணம்காட்டி ஹோட்டல் ஊழியர்கள் பழிவாங்கப் படுவதைக் கண்டிக்கும் வகையில் ஆர்ப்பாட்டம் ஒன்று தொழில் திணைக் களத்துக்கு முன்பாக விரைவில் நடத்தப்படவுள்ளது என்றும் -

அதற்கான ஏற்பாடுகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் -

கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கை அரசுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு முரணானது அல்ல என்று அவர் மேலும் சொன்னார். (ஐ-3)

# அறுவடையில் ஈடுபட்டிருந்த விவசாயிகள் மீது சூடு!

## ஒருவர் பலி; மூவர் காயம்!

கொழும்பு,செப்.24

பொலன்னறுவை மாவட்டத்தில் மன்னம்பிட்டிப் பாலத்திலிருந்து கிழக்கே 13 கிலோமீற்றர் தொலைவில் உள்ள பொரவெவ என்ற சிங்களக்கிராமத்தில் வயலில் அறுவடையில் ஈடுபட்டிருந்த படையினர்மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒரு விவசாயி உயிரிழந்தார்; ஒரு பெண உட்பட மூன்று பேர் காயமடைந்தனர்.

புலிகளே இத்தாக்குதலை நடத்தியதாக விசேட ஊடகத்தகவல் மையம் குற்றஞ்சாட்டியுள்ளது. (உ)

# வர்த்தகக் கூட்டமைப்பு கட்சிகளுடன் பேச்சு நடத்தும்

கொழும்பு,செப்.24

அண்மையில் நாடளாவிய ரீதியில் கைகோர்க்கும் மக்கள் போராட்டங்களை நடத்தி முடித்துள்ள 'ஸ்ரீலங்கா பெஸ்ட்' (Sri Lanka first) என்னும் அரசியல் சார்பற்ற வர்த்தகக் கூட்டமைப்பு சமாதான முயற்சிகளுக்கு மீண்டும் உயிர்கொடுக்கும் நோக்குடன் சில அரசியல் கட்சிகளுடன் பேச்சு நடத்தவிருக்கிறது.

தெரிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளுடன் பேச்சுக்களை இந்த வாரம் முதல் ஆரம்பிக்க வர்த்தகக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருக்கின்றது. (ஐ)

# விசேடவகுப்பு நடத்தச்சென்ற ஆசிரியை சடலமாக மீட்பு!

## வகுப்பறையில் இறந்து கிடந்தார்

யாழ்ப்பாணம்,செப்.24

பாடசாலையில் விசேடவகுப்பு நடத்துவதற்காகச் சென்ற ஆசிரியை வகுப்பறையில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில், அப்பாடசாலை ஆசிரியையான, சங்கரத்தையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சிவரூபராணி (வயது 38) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

புரட்டாதிச் சனிவிரதத்தை ஒட்டி இவர் காலையில் முழுகிவிட்டு பாடசாலைக்குச் சென்று காலை வகுப்பை முடித்துக் கொண்டு, சோடா அருந்திய பின் சிறிது நேரத்தில் தலையிடியாக உள்ளது எனத் தெரிவித்து மாணவர்களை பாடசாலை மைதானத்திற்கு விளையாட அனுப்பிவிட்டு மேசையில் தலை வைத்து இளைப்பாறிக் கொண்டிருந்ததாகவும் -

பிற்பகல் பழைய மாணவர் சங்கக் கூட்டத்திற்கு அவரை அழைப்பதற்காக அங்கு சென்ற பழைய மாணவர் சங்கச் செயலாளர் அந்த ஆசிரியையை அழைத்த போது அவர் பேச்சு மூச்சின்றிக் காணப்பட்டதாகவும் - கூறப்படுகின்றது.

பின்னர் அயலவர்களின் உதவியுடன் அந்த ஆசிரியை சங்கானை ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்ட போது அவர் உயிர் பிரிந்திருப்பது தெரியவந்தது.

அவரது சடலம் பின்னர் பிரேத பரிசோதனைக்காக யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

மரண விசாரணையை மேற்கொண்ட மல்லாகம் நீதிபதி, சடலத்தை பிரேத பரிசோதனை செய்யுமாறு ஆஸ்பத்திரி சட்ட வைத்திய அதிகாரிக்கு பணித்ததுடன், பரிசோதனையின்பின் சடலத்தை உறவினரிடம் கையளிக்குமாறும் உத்தரவிட்டார்.

அவரது உத்தரவின் பேரில் சடலம், பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ஐ-15)

# ஆசிரியர் தினம் கொண்டாட ஏற்பாடு

வடமராட்சிகிழக்கு,செப்.24

சர்வதேச ஆசிரியர் தினத்தை வடமராட்சியில் வெகு சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாட்டினை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மேற்கொண்டுள்ளது.

சர்வதேச ஆசிரியர் தினமான எதிர்வரும் 5ஆம்திகதி வடமராட்சி, தென்மராட்சி பிரதேச, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கக் கிளைகள் இணைந்து வடமராட்சியில் வட இந்து மகளிர் கல்லூரியில் பிற்பகல் 2 மணிக்கு விழாவினை நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை -

இத்தினத்தில் வலிகாமம், யாழ்ப்பாணம், தீவகம் ஆகிய இடங்களில் உள்ள இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கக் கிளைகள் இணைந்து யாழ்ப்பாணத்தில் இத்தினத்தைக் கொண்டாடவுள்ளன. (ஐ-182)


ENGLISH SPOKEN & GRAMMAR
புதிய பிரிவு ஆரம்பம்
BY: BRITTO
இடம்: கொக்குவில் (ஞானபண்டிதா பாடசாலைக்கருகில்)
திகதி: 27.09.2001 (வியாழன்)
நேரம்: மாலை 3.30 (ப.நே.)
செவ்வாய், வியாழன்.
(C/18343)



NEW SCIENCE HALL
யாழ்ப்பாணம்
2002 - A/L
வினா விடை வகுப்பு
இரசாயனவியல்
திரு.மணியம்
ஆரம்பம்:– 26.09.2001
புதன் பிற்பகல் – 2.30
(திங்கள், புதன் - 2.30 p.m.)
(92613)



ராஜா யாழ்ப்பாணம்
இன்று முதல் 26.09.2001 வரை
குதூகல ஆரம்பம்
ரஜனிகாந்த், கமலஹாசன், மனோகர், ஸ்ரீபிரியா
மற்றும் பலர் நடிப்பில்
அலாவுதீனும் அற்புதவிளக்கும்
தினசரி :– 10.30, 2.30 (புதிய நேரம்)
செவ்வாய்க்கிழமை பி.ப. 5 மணிக்கு விசேட காட்சி உண்டு.
(C/18274)



நாகம்ஸ் சுன்னாகம்
அர்ஜுன், மனிஷாகொய்ராலா, ரகுவரன்
நடிப்பில்
முதல்வன்
(ரீல்ஸ்)
காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)
(92591)



நிதுஷா ஸ்ருடியோ
அன்ட்
வீடியோ





யாழ் பல்கலைக்கழக 20 வது பொது பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெறும் பட்டதாரிகளை நாம் மனதார வாழ்த்துகின்றோம்.
இந் நிகழ்வை உட்புற வீடியோப்படம் பிடிப்பதற்கு எமது நிறுவனத்துக்கு மட்டும் அனுமதி கிடைத்துள்ளதை நாம் மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.
இந் நிகழ்வின் வீடியோப்பிரதிகளை பெறவிரும்புபவர்கள் முற்கூட்டியே எமது அலுவலகத்தில் பதிவுசெய்து உறுதிசெய்து கொள்ளவும்.
'வர்ண சொப்பனங்களின் வசந்த வாசல்'
நிதுஷா ஸ்ருடியோ அன்ட் வீடியோ
பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
யாழ் நகரில் தொடர்பு முகவரி:-
"பூங்கனிச்சோலை"
(முடமாவடி, திருநெல்வேலி.


# முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 28 - 04 - 1944

உதிர்வு 04 - 10 - 2000

## அமரர் கந்தன் சின்னத்தம்பி

திதி: சப்தமி 24.09.2001

அன்புக்கிருப்பிடம் ஆனாய் நீயே!
பண்புக்கோர் பொக்கிஷமுமானாய் நீயே!
பார்புகழப் பத்தினியொடு வாழ்ந்தாய் நீயே!
ஆண்டொன்றாவதற்குள் பிரிந்துவிட்டாய் நீயே!
தேவர் உலகில் தேவியொடு வாழ்வாய் நீயே!
பிரிவுத் துயரத்தில் தவிக்கின்றோம் நாமே!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*பருத்தித்துறை.* (C/18373) - குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தயாளம் இரட்னாதிக்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தயாளம் இரட்னாதிக்கம் (19.09.2001) புதன்கிழமை யேசுவின் மகிமைக்குள் சேர்ந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற ஜெயம் இரட்னாதிக்கத்தின் (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்) அன்பு மனைவியும் திருமதி ரஞ்ஜினி மனோகரன் (லண்டன்), திருமதி ஜெயந்தி ஒலலசேகரம் (ஆஸ்திரேலியா), திருமதி குமாரினி வண்டமியூரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (25.09.2001) செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு (இலங்கை நேரப்படி) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் பரிகன்னி மரியாள் (அங்கிலிக்கன்) சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
*கோப்பாய் மத்தி.* (92615) ரஞ்ஜினி மனோகரன்.

## சவரிமுத்து விக்டர் யோசவ்

சுருவிலைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து விக்டர்யோசவ் அவர்கள் நேற்று (23.09.2001) ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் மேரி (பொன்னம்மா) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சவரிமுத்து - விக்ரோறியாப்பிள்ளை தம்பதிகளின அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மனுவற்பிள்ளை - றோசமுத்து தம்பதிகளின் மருமகனும், விஜேந்திரன், ஹயசிந்மகேந்திரன், ஜெராட் சந்திரன், யூட் நரேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கொன்சி, பற்றீசியாநிர்மலா, ஜறின்நிர்மலா, நிலாந்தினி ஆகியோரின் மாமனாரும், யுடிஸ்ரா, யூட், கெரின், ஜவன், சுஜித்தா, டெலினா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான ஜயாத்துரை, மார்கிரட், யோசேப்பின், கிறிசோஸ்ரம், பஸ்ரியாம்பிள்ளை மற்றும் பிரான்சிஸ்கா, புஸ்பம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அந்தோனிப்பிள்ளை, வயலட், ரஞ்சிதம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.09.2001) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 (இ.நே.) மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு மாலை 3.30 (இ.நே.) மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டபின் பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி மேரி (பொன்னம்மா) (மனைவி)

*151, 4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.* (92614)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாயிறு, போயா தினங்களில் சேவைக்காலப் பயிற்சி வகுப்பு

## ஆசிரியர் சங்கம் ஆட்சேபம்

வடமராட்சிகிழக்கு,செப்.24

ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்களை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வேண்டுகோளுக்கு மாறாக ஞாயிறு, போயா தினங்கள் ஆகிய நாள்களில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டமையினை சங்கம் வன்மையாகக் கண்டித்து ஆட்சேபனையைத் தெரிவித்து உள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ்.மாவட்டத் தலைவர் க.கணேசமூர்த்தி தலைமையில் வடமராட்சியில் நடைபெற்ற கரவெட்டி, மருதங்கேணி கிளைகளின் நிர்வாக சபைக் கூட்டத்தில் இது தொடர்பாக கண்டனமும் ஆட்சேபனையும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஏற்கனவே இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் வலயக் கல்விப் பணிப்பாளர்களைச் சந்தித்து ஞாயிறு, போயா தினங்களில் ஆசிரியர்களுக்கு சேவைக்கால பயிற்சி வகுப்புகளை நடத்துவதில்லையென இணக்கம் காணப்பட்ட பின்னரும், ஞாயிறு, போயா தினங்களில் சேவைக்காலப் பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு ஆசிரியர்களைக் கலந்துகொள்ளுமாறு பாடசாலைகளுக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இது தொடர்பாக ஆசிரியர்களால் சங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்தே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ஐ-182)

## நம்பிக்கையில்லாப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் அமைச்சர்களான எஸ்.பி. திஸநாயக்கா தலைமையிலான குழுவின் கைகளிலேயே தங்கியுள்ளதாகக் கருதப்படுகிறது. இந்தக் குழுவில் பேராசிரியர் ஜீ.எல்பீரிஸ், மஹிந்த விஜேசேகர, டலஸ் அழகப்பெரும உட்படப் பலர் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பிரேரணை நிறைவேறும் பட்சத்தில் புதிய தேர்தல் ஒன்றுக்கு உத்தரவிட வேண்டிய கட்டாயம் ஜனாதிபதிக்கு ஏற்படும் என அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டனர். (ஐ-3)


வெளிவருகின்றது... "படி" ... "PAHDI"

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

உலக ஆசிரியர் தின வெளியீடு

யாழ்ப்பாண ஆசிரியர் கல்வி வரலாற்றில் புதிய புலர்வு "படி" – 02

பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்களின் பகிர்வு

மற்றும் ஆசிரியர் பயிற்சியின் தேர்ச்சிகள், உளப்பகுப்பாய்வில் கனவுகள், மனித விடுதலைக்கான கல்வி, தேசிய ஆசிரியர் கல்வி அதிகார சபை பாலர் கல்வி மற்றும் பல அம்சங்களுடன்... "படி"

விசேட கட்டுரைகளாக

- பேராசிரியர் சபா.ஜெயராசா அவர்களின - ஆசிரியத்துவ ஐந்தொகை *(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கல்விப்பீடம்)*
- பேராசிரியர் சோ.சந்திரசேகரம் அவர்களின் *(கொழும்பு பல்கலைக்கழகம், கல்விப்பீடம்)* கல்வியும் சமூக மேம்பாடும் ஒரு மாற்றுக்கருத்து
- திரு.ஜெயசேன புத்பிட்டிய அவர்களின் *(தேசிய கல்வி நிறுவகம்)* சிறந்த பாடசாலையும் ஆசிரியர் தொழில்வாண்மையும்
- திரு.எஸ்.ஜலால்தீன் அவர்களின் *(கல்வி உயர்கல்வி அமைச்சு)* நூலக விஞ்ஞானமும் தகவல் தொழில்நுட்பமும்

ஆசிரியர்கள், கல்வியாளர்களுக்கு உதவும் கட்டுரைகளுடன்.... "படி" – 02

படித்தேன்! படித்தேன்!! படித்தேன் சுரந்தது.

- இதழாசிரியர் திரு.பா.தனபாலன் -

WORLD TEACHER'S DAY JAFFNA NATIONAL COLLEGE OF EDUCATION PUBLICATION

(92617)



IBMS இன் புலமைப்பரிசில் பரீட்சை 2001/2002

மேற்படி பரீட்சைமுடிவுகள் தனித்தனியே தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன. கிடைக்கப்பெறாதவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பித்தகாரியாலயத்தில் அல்லது தலைமைக்காரியாலயத்திற்கு வந்து பெறுபேற்றினை பார்வையிடலாம்.

2001/2002கல்வியாண்டிற்குரியவகுப்புக்கள் எதிர்வரும் 29/09/2001(சனிக்கிழமை) ஆரம்பமாகவிருப்பதால் 26/09/2001ற்கு முன்னர் தங்கள்பதிவினையும், தங்களுக்குரிய வகுப்பு நேரத்தினையும் உறுதிப்படுத்திக்கொள்ளவும்

Note:- A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்குரிய (September SCH III Batch)வகுப்புக்களும் 29/09/2001 அன்றுஆரம்பமாகவிருப்பதால்26/09/2001ற்குமுன்னர் தமது நேரத்தினைஉறுதிப்படுத்திக்கொள்ளவும். SCH III Batch புலமைப்பரிசிலில்தோற்றி இது வரை பதிவு செய்யாத மாணவர்களும் பதிவு செய்து கொள்ளலாம்.

Head Office
IBMS
[Affiliated to Barrington University of USA]
No.701 K.K.S Road,
Jaffna. Phone: 021-3165

Branches
NMMV Road, Nelliyady.
Main Road, Chankanai.

IBMS IT EDUCATION FOR THE NEW GENERATION


## அதிசிறப்பு தரத்தில் சித்தி

தென்மராட்சி,செப்.24

வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) பிரதேச செயலர் பிரிவில் முதலாம் தர கிராம அலுவலர்களாகக் கடமையாற்றும் ஐந்து பேர் அதி சிறப்புத் தர கிராம அலுவலர் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளதாக யாழ்.செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரீ. நந்தகுமார், கே.எஸ்.சிவராசா, வீ.கே.சண்முகநாதன், ஜே.ஏ. ஞானச்சந்திரன், எஸ்.சிவலிங்கம் ஆகியோரே சித்தி பெற்றவர்களாவர்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து 12 கிராம அலுவலர்கள் அதிசிறப்புத் தரப் பரீட்சையில் சித்திபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## இ.தொ.கா. குழு ஜனாதிபதியை சந்திக்கும்

கொழும்பு,செப்.24

மலையக மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தூதுக்குழு ஒன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேசவுள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக்கிழமை ஜனாதிபதி மாளிகையில் இந்தச் சந்திப்பு இடம்பெறும். (ஐ-9)

## முல்லைத்தீவுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு மோதல் இடம்பெற்றதாகப் படைத்தரப்புத் தெரிவித்தது. கடலில் மோதல் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் அடையாளம் தெரியாத இரண்டு வர்த்தகக் கப்பல்கள் தெற்கு நோக்கி 15 கடல் மைல் தொலைவில் சென்று கொண்டிருந்ததாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

இந்த இரு கப்பல்களும் விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல்களாக இருக்கக் கூடும் என்று ஊகிக்கப்பட்டதாக சில செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

ஆனால் அந்த இரு கப்பல்களும வர்த்தகக் கப்பல்கள் என்பதை பின்னர் கடற்படையினர் உறுதி செய்ததாக ஊடகத் தகவல் நிலையம் அறிவித்திருக்கிறது.

இதற்கிடையில் -

கடற்படைப் படகு ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் தற்கொலைத் தாக்குதல் நடத்தியதை அடுத்தே இந்த மோதல் இடம்பெற்றதாக இராணுவப் பேச்சாளரை ஆதாரம் காட்டி வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது. இத்தாக்குதலில் கடற்படைப்படகு சிறு சேதமடைந்ததாக இராணுவப் பேச்சாளர் கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

வடக்குக் கடலில் சந்தேகத்துக்கிடமான முறையில் சென்றுகொண்டிருந்த வர்த்தகக் கப்பல்களில் ஒன்று நேற்றுமாலை திருகோணமலை துறைமுகத்துக்குத் திருப்பப்பட்டு அங்கு வைத்து அதன் மாலுமிகளும் பணியாளர்களும் விசாரிக்கப்பட்டதாக இலங்கை வானொலி நேற்றிரவு தெரிவித்தது.

முல்லைத்தீவுக் கடலில் நேற்று இடம்பெற்ற கடற்சண்டை தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்புத் தகவல்கள் எதுவும் உடனடியாகக் கிடைக்கவில்லை. (ஐ-3-9)


ஈசன் கல்வி நிலையம்

A/L 2002 DAY CLASS

எமது வழமையான ஆசிரியர் குழுவுடன் ஆரம்பமாகின்றது.

காலம்:– 28–09–2001 வெள்ளி 8.00 மணி

(92610)



சேவை

சமயக் கிரியைகள், இறுதிக்கிரியைகளுக்கு தொடர்புகொள்ளவும்.

திரு.க.ஈஸ்வரஐயர் (ஈசவக் குருக்கள்)
239, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(92583)


புலிகளுடன் பேசுமாறு வலியுறுத்தி

# 48 தொழிற் சங்கங்கள் போராட்டத்துக்கு ஏற்பாடு

கொழும்பு,செப்.24

அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் உடனடியாகப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் எனக்கோரி அரசசார்பற்ற 48 தொழிற்சங்கங்கள் நாடளாவிய ரீதியில் போராட்டங்களை நடத்துவதற்கு திட்டமிட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசாங்கம் புலிகளுடன் பேச்சு நடத்தியே தீர வேண்டும் என்பதை இன்று அனைவரும் புரிந்துகொண்டுள்ளனர்.

எனவே சமாதானத்தை வலியுறுத்தியும், அரசு புலிகளுடன் உடனடியாகப் பேச்சு நடத்தவேண்டும் எனக்கோரியும் முன்னெடுக்கப்படவுள்ள இந்தப் போராட்டங்களுக்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவு அளிப்பார்களெனத் தாம் நம்புவதாகத் தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ-4)

## மந்திகையில் 'எக்ஸ்-றே' பிரிவு ஸ்தம்பிதம்

தென்மராட்சி,செப்.24

மந்திகை ஆதார வைத்திய சாலையில் செயற்படும் 'எக்ஸ்-றே' பிரிவில் 'பிலிம்' கழுவுவதற்குப் பயன்படுத்தும் இரசாயனப் பொருள்கள் முடிவடைந்துள்ளதால் இவ்வைத்தியசாலைக்கு வரும் அவசர நோயாளர்கள் உரிய சிகிச்சை பெறமுடியாமல் அவதியுறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த இரசாயனப் பொருள்கள் கொழும்பிலிருந்து வந்துசேரும்வரை இந்த நோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. (ஐ-117)

## வன்னி எம்.பியின் பாதுகாவலர் தாக்கப்பட்டார்

கொழும்பு,செப்.24

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விநோதலிங்கத்தின் பிரத்தியேக பாதுகாவலரும், வாகனச் சாரதியும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் சிலரால் கடந்த வெள்ளிக் கிழமை இரவு தாக்கப்பட்டுள்ளதாக இராணுவ உயர் அதிகாரிகளிடம் முறையிடப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் உணவு அருந்துவதற்காக மோட்டார் சைக்கிளில் உப்புக்குளம் அம்மன் கோயில் வீதி வழியாகச் சென்றுகொண்டிருந்த போது இடையில் மறிக்கப்பட்டுத் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)


UNIVAC College of Computer Information Technology

A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான கணனிப் பயிற்சி நெறிகள் ஆரம்பமாகியுள்ளன. தபால் மூலமாக விண்ணப்பங்களை மேற்கொண்ட மாணவர்களும் இதுவரை விண்ணப்பிக்கத் தவறிய மாணவர்களும் 26.09.2001 ஆம் திகதி 9 மணிக்கு பயிற்சிநெறியில் இணைந்துகொள்ளவும்.

குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இணைந்து கொள்ளும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படமாட்டாது.

1201, K.K.S. Road,
Jaffna.
(92618)
Director,
UNIVAC



Computer Courses

மேலதிக பிரிவுகள் ஆரம்பம் 30.09.2001

| பாடநெறி | காலம் (மாதங்கள்) | முழுமையான பயிற்சிக் கட்டணம் |
|---|---|---|
| Diplon in MS Office | 5 | 1,000/= |
| Diploma in Computer Programming | 8 | 2,500/= |

9.9.2001 ஆரம்பிக்கப்பட்ட டிப்ளோமா கற்கை நெறிகளுக்குரிய பிரிவுகள் அனைத்திற்குமான அனுமதிகள் பூர்த்தியடைந்த நிலையில் மேலதிக அனுமதிகள் 16.09.2001 முதல் நிறுத்தப்பட்டிருந்தன. அனேக மாணவர்களினதும் பெற்றோர்களினதும் வேண்டுகோள்களுக்கு இணங்க மேற்படி டிப்ளோமா கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவுகள் 30.09.2001 பகல் 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

IIS
Institute of Informatics Studies
No. 100, Clock Tower Road, Jaffna.
021-2831 Email: iis@sltnet.lk


## மரண அறிவித்தல்

### இராஜா சேனாதிராஜா

(இளைப்பாறிய எழுதுவினைஞர் - மானிப்பாய் இந்துக்கல்லூரி)

மானிப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் உடுவில், டச் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜா சேனாதிராஜா நேற்று (23.09.2001) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராஜமனோரஞ்சிதத்தின் அன்புக் கணவரும் கிருசாந்தி ரவீந்திரா (விரிவுரையாளர், இராமநாதன் நுண்கலைப்பீடம்), கிருஷ்ணமோகன் (ஆர்.எஸ்.கே. பாம் - உடுவில்), கிருஷ்ணகுமார் (கிருஷ்ணா பாம் - மானிப்பாய்), பாஸ்கரன் (கண்ணா வீடியோ சென்ரர் - உடுவில்), கிருஷ்ணரூபினி (நடன ஆசிரியை - உடுவில் மகளிர் கல்லூரி), கணேஸ்குமார், கிருஷாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் எஸ்.ரவீந்திரா (கொமேஷல் வங்கி முகாமையாளர், யாழ்ப்பாணம்), கே.புனிதவதி, கே.சிவதர்சினி, பி.தர்சினி, கே.குசலவன் ஆகியோரின் மாமனாரும் தேவராஜா, ரட்ணராஜா, ராயேந்திரராஜா, காலஞ்சென்ற இராஜேஸ்வரி, காலஞ்சென்ற மகேந்திரராஜா, செல்வராஜா ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் உடுவிலில் உள்ள அவரின் இல்லத்தில் இன்று (24.09.2001) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பாஸ்கரன் (கண்ணா)
(மகன்)

*டச் வீதி,*
*உடுவில்.*

(C/18374)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 36ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.09.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org